அது யாருக்குத் தெரியும்!

!

மாணிக்கசீவன் ஆராய்ச்சி.

வெளியீடு:

இந்திய சித்த வைத்தியக் கலை ஆராய்ச்சி சாலை,

கும்பகோணம்.

(கிளை ஸ்தாபனம்) வையகளத்தூர்.

நீடாமங்கலம் P. O.

சித்திரம் பேசியது! விஞ்ஞானம் விளங்கியது!!

என்னும்

மாணிக்கசிவன் ஆராய்ச்சி

முதல் வெளியீட்டின் மதிப்புரைகள்.

31-3-59 'தமிழ்நாடு' தினசரி செய்தித்தாளில்

நம்மனோர் சித்த நூல்களில் பொதிந்து கிடக்கும் சிறந்த தத்துவங்களை ஆராய்ச்சி செய்துவரும் தமிழர்களின் ஆர்வத்திற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு.

மெய்ஞ்ஞான ஓவியக் கண்ணுடன் எழுதிய ஓவியத்தை விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்துப் பல அரிய கருத்துக்களை ஆசிரியர் தந்துள்ளார்.

சிவன் மின்சக்தி உரு என்றும்; சிவனின் அணிகலன்கள் ஒவ்வொன்றிற்கும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஆசிரியர் இதுபோன்ற பல ஆராய்ச்சி நூல்களைவெளியிட்டுத் தத்துவ ஆய்வை வளர்க்க வேண்டும் என்றும், திருமந்திரம் போன்ற கருவூலங்களைத் தமிழர்கள் பயன்படுத்தும்படி செய்யவேண்டும் என்றும் விரும்புகின்றோம்......................

16—2—59 'தினத் தந்தி' செய்தித்தாளில்...

அற்புதமான ஆராய்ச்சி! சிவனுடைய (கடவுளுடைய) படத்துக்கு இன்றைய விஞ்ஞான முறையில் விளக்கம் தருகிறார். ஆசிரியரின் முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது..................

Dr. B. Natarajan,

Director.

National Council of Applied Economic Research, New Delhi. 9--2—59

"சிவன் திருவுருவிலேயே வோல்டாஸ் மின்சார அமைப்பு இருப்பதை கண்டுபிடித்திருப்பது மதி நுட்பமே"

வெளியீடு நெ. 3

அது யாருக்குத் தெரியும்?

மாணிக்கசீவன் ஆராய்ச்சி

வெளியிடுபவர்

டாக்டர் V. G. ராஜகோபாலன்,

கும்பகோணம்

இந்திய சித்த வைத்தியக் கலை ஆராய்ச்சி சாலை,

கிளைஸ்தாபனம்

"வையகளத்தூர்"

நீடாமங்கலம் P. O.

கருவேதோ குருவேதோ வெண்பார் மாண்பர்
கண்டுபதி தெரிசிக்கான் கசடனுகும்
உருவேது வென்ருக்கால் விந்து நாதம்
உற்றுப்பா ருன்னுடம்பு வேறுமுண்டோ
தருவே யிதைவிட்டாற் பொருள் தானேது
தரணியில் யோகமுதல் ஞானமேது
உருவேது சமரசமே வறிவதாகு
முற்பனமாம் பிறவியது மொழிந்துபோமே.

சித்தர் கழக அழைப்பிதழ்.

இந்திய
சித்த வைத்தியக்கலை
ஆராய்ச்சி சாலை,
கும்பகோணம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சுவடி கூறும் இந்திய ஆட்சிகள்
கால நிர்ணயம்.

நாம் பழய சுவடிகள் ஆராய்ச்சியில் புகுந்து ஆராய்ச்சி செய்து வருங்காலை இதுவரை இந்தியாவில் நடைபெற்ற ஆட்சிகள் பற்றியும் இனி நடக்கவிருக்கும் ஆட்சிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ள ஒரு தனி ஏடு கிடைத்தது. அதில்

கலி பிறந்த பிரபவா வருடந்தன்னில் ககனபரி	
சித்தனுமோரைஞ் ஞூறுண்டான்.	500
நலமான சென்மேசன் முன்னூராண்டான்.	·300
நரேந்திரனும் இருநூற்றிருபத்தெட்டாம்.	228
தவமான சாரங்கன் எண்பத்தைஞ்சு	85
சத்தி விக்கிரமாதித்தன் புத்தியால் ஆயிரமுமாயிரமு	
மாண்டான்.	2000
பின்னிருநூற்றி எழுபதுமே சாலியவானன்	270
நலமான போசனுமோர் ஐநூறுண்டான்,	500
இராயருமோ இருநூற்றிதொண்ணூற்றெட்டு,	298
குலமான வடுகனுமோ எண்பத்தைஞ்சு	85
குரும்புள்ள துலுக்கனுமோ அறுபத்தெட்டு.	68
வறமான போகர் குலம் தொண்ணூற்ருறு.	96
ஆண்ட பின்பு	
விசையனு மோ பன்னிரண்டாள்வான்	12
தலமான விசையனுமோ அன்பதின் மேற்சென்று	50
தாழ்ந்த கிள் ராமவாணுய்த் தரிப்பன் தானே.	

மேற்கண்ட பாட்டிற்கு, சாது மாணிக்கசீவன் கூறும் ஆராய்ச்சியின் சிந்தனே.

வறமான போகர்குலம் தொண்ணூற்ருறு என்பதை ஆங்கிலேய ஆட்சிகாலம் இந்தியாவில் சக்கரவர்த்தி என்ற முறையில் அரசாண்டது எனவும்.

(b)

விசையனுமோ பன்னிரண்டாள்வான் என்பதை 1947ல் காங்கிரஸ் சுதந்திரம் பெற்று பன்னிரண்டு ஆண்டு காலத்தின் பின் 1959ல் "சுதந்திரக் கட்சி" என்ற புதிய கட்சி தோன்றி யிருப்பதால் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

அதன்மேல் தலமான விசயனுமோ அன்பதின் மேற் சென்று என்பதை "காங்கிரஸ்" ஆட்சியில் புதிய திருப்பமேற் பட்டு "காங்கிரஸ்" எந்த அடிப்படையில் ஆரம்பகாலத்தில் செயலாற்ற எண்ணியதோ அதே குறிக்கோளைக் கொண்ட ஆட்சி காலம் ஐம்பது வருடங்கள் கி. பி. 2009 வருடம் வரை நிகழலாமென எதிர்பார்த்துச் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

அதன் பின் தாள்ந்தகிள் ராமவனுப்த் தரிப்பன் தானே என்பதை சிந்தித்ததில் கிள்ராமமென்பது ! ஆச்சரியக் குறி யைத்தான் குறிக்கின்றது ... ... சித்தர் கழகச் சின்னமாக ! குறியைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.........

எம் முடிவையே ஸ்திரமாகக் கொள்ளாமல் சிந்தித்துத் தெளியக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என் நன்றி.

அது யாருக்குத் தெரியும்? என்னும் இவ் வாராய்ச்சி நூலை என் சற்குரு சாது மாணிக்கசீவன் அவர்களின் ஆணையை சிரமேற்கொண்டு விஞ்ஞான அறிவு மெய்ஞானத்தை மிஞ்சியதல்லதென்பதை இன்றைய உலகம் அறியவேண்டுமென்ற நோக்கோடு வெளியிடலானேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு வேண்டுவன செய்து பேருதவி தந்துள்ள எங்கள் சித்தர் கழகச் செயலாளர் கற்கோவில் உயர்திரு **பழனிவேல் தென்கொண்டார்** அவர்களுக்கு என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்,

டாக்டர் **V. G. ராஜகோபாலன்,**
வையகளத்தூர்.

முன்னுரை.

பாரதநாட்டில் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சித்தர்கள் பூதக் கண்ணுடியும் இன்றைய டெலிவிஷனு கிய கீதக்கண்ணுடியும் கண்டுபிடித்துவிட்டார்கள். தாழ்ந்த மயிர் புலராதே என்று அணுவின் ரகசியத்தை அம்பலப்படுத்திவிட்டார்கள். பசிப்பிணி நீக்கும் மா மருந்தை தத்துவஞானத்தால் காட்டிவிட்டார்கள் என்ற விவரங்களைத்தான் அது யாருக்குத் தெரியும்? என்ற எம் ஆராய்ச்சி நூலில் காணமுடியும்.

நான் விவசாயத்துறை நிபுணர் என்றபட்டம் பெற்றிரு விட்டாலும்கூட மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்று சொன்ன நம் முன்னோர்களின் உட்கருத்தைச் சிந்தித்துத் தெளிந்து பசிப்பிணி நீக்கும் மாமருந்தைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கின்றேன்.

இவ்வாராய்ச்சி நூல் விவசாயிகளின் நண்பர்களாகவும் தத்துவஞான வழிகாட்டியாகவும், விளங்குகின்றதென்பதை இதை வாசித்தறிந்தவர்கள் உணருவார்கள்.

விஞ்ஞான; மெய்ஞான சாஸ்த்திர நிபுணர்களுக்கும்; சாதாரண மக்களுக்கும் இவ்வாரய்ச்சி நூல் புத்துணர்வு அளிக்க வல்லதாகும்.

இங்ஙனம்,

சாது மாணிக்கசிவன்.

குருவே துணை அறிவே வழி.

அது யாருக்குத் தெரியும்?

தஞ்சை ஜில்லாவில் நீடாமங்கலத்திலிருந்து ஒன்றரை மைல் அளவில் வையகளத்தூர் என்ற ஓர் குக்கிராமமிருக்கின்றது. அங்கே சாது மாணிக்கசிவனால் தோற்றுவிக்கப் பட்டிருக்கும் சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலையின் கிளை ஸ்தாபனத்துக்கு நாங்கள் சென்றோம். குருகுல முறைப்படி அப்போது வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அத்துடன் நாங்களும் சேர்ந்து அன்றைய பாடப் போதனையைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதையே இங்கே குறிப்பிடுகின்றேன்.

நோய்நாடி நோய்முதல் நாடி – அது
தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்,

— *குறள்.*

என்பதற்கு விளக்கம் கொடுத்துவரும்போது சாதுவின் திருவாயிலிருந்து வந்த மொழியைச் சொல்லுகின்றேன்.

இந்தக்காலத்தில் அணு வைத்தியம் பற்றிய ஆராய்ச்சிகள் பரவிவருகின்றன. நவீன விஞ்ஞானிகள் விஷக்கிருமிகளால்தான் வியாதிகள் பரவுகின்றன என்றும் விளக்கம் தருகிறார்கள். அதற்குரிய மருந்துகளைக் கண்டுபிடித்து விமர்சனமும் தருகிறார்கள்.

அதைப்போலவே இப்போது நானும் நோய் உண்டாவதற்குக் காரணமும், அதற்குறிய மருந்தும் கண்டுபிடித்திருப்பதை விமர்சனம் செய்கின்றேன்; கேளுங்கள்!

மலத்தில் நீங்கள் எதிர்பாராத விதமாகவோ; அல்லது தெரிந்தோ; எச்சிலை உமிழ்ந்துவிட்டால் அஃது உங்களுக்கு நோய் உண்டாவதற்குக் காரணமாகி எச்சில்கூட விழுங்க முடியாத நிலையில் உங்கள் தொண்டை புண்ணாக வலிக்கும் என்பதை உணரலாம். அவ்வுபாதை நீங்கப்பெற வேண்டுமானால் எச்சிலை நெருப்பில் உமிழவேண்டும். அவ்வாறு செய்தால் குணமாகிவிடுகிறது என்பதையும் உணரலாம்.

இந்த செயலை நீங்கள் பரீட்சார்த்தமாக வேண்டுமானாலும் செய்துபார்த்து அனுபவ சித்தாந்தமாக்கிக் கொள்ளலாம்.

இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்வது என்னவென்றால் நோய் ஏற்பட்ட விதமும், அதற்குரிய மருந்தும் அறிந்து வைத்தியம் செய்ததால் நோய் குணமாகியது என்பதே.

இஃதை அணு வைத்திய முறை என்றுதானே சொல்ல வேண்டியிருக்கின்றது. இவ்வாறேதான் நம் முன்னோர்கள் அணுவின் ரகசியங்களை மிகமிக நன்கறிந்து அணுமருந்தை எளிய முறையில் செய்து வைத்தியத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கியுள்ளார்கள். அதைப்பற்றிய விபரங்களைத்தான் பின்வரும் வகுப்புகளில் தெரிந்து கொள்ளப் போகிறீர்களே! என்றார்.

அத்துடன் அன்றைய வகுப்பு முடிவடைந்தது. ஆனாலும், எங்களுக்குள்ள குறுகுறுப்புத் தன்மை மேன்மேலும் ஆர்வத்தைத் தூண்டியது. எல்லோரும் எழுந்துபோயும், நானும் என்னுடன் வந்த என் தாத்தாவும் அப்படியே உட்கார்ந்திருந்தகைக் கண்ட சாது என்ன! உங்களுக்கு ஏதாவது சந்தேகத்திற்கு விடையளிக்க வேண்டுமோ? என்றார்.

சாதுவிடம் சென்ற எங்கள் இருவரில் என் பெயர் **ராஜகோபாலன்,** என்கூட வந்திருந்த என் தாத்தாவின் பெயர் **தியாகராஜ வைத்தியர்** என்பதாகும்.

ராஜகோபாலன்: மலமோ உடலிலிருந்து கழிந்து வேறுபட்டிருக்கின்றது. ஆனாலும் அதற்கும், உமிழ்நீருக்குமுள்ள தொடர்பு நீங்கவில்லை. நோய்க்குக் காரணமாகவும் நோய் நீக்கத்திற்குக் காரணமாகவும் உமிழ்நீர் அமைகின்றதே எங்ஙனம் என்றுதான் அறிந்து தெளிவடைய ஆவல் கொண்டுள்ளோம்.

சாது மாணிக்கசீவன்: திருக்குறளை நீ படித்திருக்கின்றாயா?

ராஜகோ: திருக்குறளை எத்தனையோ தடவை படித்திருக்கின்றேன். ஆனால் அதிலிருந்து அரிய கருத்துக்களை மட்டும் அறியக்கூடிய சக்தி எனக்குப் போதவில்லை.

சாது: திருக்குறளில் நூற்றிப்பத்தாவது அதிகாரத்தில் குறிப்பறிதல் என்று ஒரு அதிகாரமிருக்கிறதல்லவா? அதில் முதல் பாட்டு என்னவென்று சொல்ல முடியுமா?

ராஜகோ: பார்க்காமல் சொல்லும் அளவுக்குப் பாடமில்லை. தயவு செய்து நீங்களே சொல்லிவிடுங்கள்.

சாது: நான் சொல்வது அவ்வளவு பொருத்தமில்லை. இதோ குறள் தருகிறேன் நீயே எடுத்து வாசி.

ராஜகோ: இருநோக்கு இவள் கண்ணுள்ள தொருநோக்கு
நோய் நோக்கொன்றந் நோய் மருந்து

–திருகுறள்.

சாது: அதற்கு என்ன கருத்துரை போடப்பட்டிருக்கின்றது. அதையும் படி.

ராஜகோ: இவள் பார்வையானது இரண்டு. ஒன்று நோய் செய்யும் பார்வை; மற்ருென்று அந்நோய்க்கு மருந்தான பார்வை—என்பதாம்.

சாது: பார்வையிலும் சத்ரு மித்ருத் தன்மை அதாவது பகையும் நட்பும் அடங்கியுள்ளது என்பதை வள்ளுவர் குறிப்பிடுகின்ருர்.

ராஜகோ: எப்படி! எப்படி!

சாது: "பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னேய்க்குத் தானே மருந்து"

என்று 111-வது புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் கருத்து என்ன என்பதை வாசித்துப் பார்.

ராஜகோ: முப்பிணிகளுக்கு மருந்துகள் வேறேயுள்ளன ஆபரணத்தையுடையவள் தன் காமநோய்க்குத் தானே மருந்தாளுள் - என்பதாம்.

சாது: அணியிழை என்பதற்கு ஆபரணத்தையுடையவள் என்று வாசித்தாயே! ஆபரணம் என்பது எதைக் குறிக்கின்றது தெரியுமா?

ராஜகோ: பொன், வைரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவள் என்பதைத்தானே குறிப்பிடுகின்றது.

சாது: ஒரு பெண்ணுக்கு இயற்கையாக கவர்ச்சியான அழகைக் கொடுக்கக்கூடியது எது தெரியுமா? பொன் னும், முத்தும், வைரமுமல்ல! அவளுடைய ஸ்தன்யங் களும், நீண்ட கூந்தலும்தான்.

ராஜகோ: இங்கே அழகைப்பற்றி ஏன் குறிப்பிடுகிறீர்கள்.

சாது: பார்வையிலும் மருந்தைப்போல சத்ரு மித்ருத்தன்மை (பகை நட்புத்தன்மை) அடங்கி இருக்கின்றதென்று சொன்னேனல்லவா? அதை எப்படி என்பதை நீ உணர்ந்துகொள்ளவே அழகைப்பற்றி இங்கே குறிப் பிட்டேன். சொல்கிறேன் கேள்:

ஒரு ஸ்திரி ஓர் ஆடவனுடைய **கண்களுக்கு அழ காகப்** படுகின்ருள் என்று வைத்துக்கொள். அப்போது அவ் வாடவனுக்குத் தன் **கண்களே** காம நோயை உண்டாக்கு கின்றது. அக்காம நோய் நீங்க வேண்டுமானுல் அவளு டைய கண்களும் இவ்வாடவன்மேல் நோக்கி அவளுக்கும் காம நோயை உண்டாக்கவேண்டும். அப்படி இருவர்க ளுக்கு உண்டான காம நோய் தீரவேண்டுமானுல் புணர்ச்சி மகிழக் கருத்து ஒருமைப்படவேண்டும். அப்போதுதான் அந்நோய் நீங்கப்பெற்றதாகின்றது. எனவே **அழகுக்குக் கண்கள்** பகையாகவும் நட்பாகவும் ஆகி கருத்தொருமித்த மருந்து முடிந்ததால் நோய் நீங்கப்பெற்றது என அறிதல் வேண்டும்.

ஒரு மருந்தை முடிக்க வேண்டுமானுல் அம் மருந்தின் சத்துருவால் கட்டி அதன் மித்துருவால் குருவாக்க வேண்டு மென சித்தாதி நூல்கள் கூறுகின்றன.

அண்டத்தில் நோய்க்கு மருந்து முடிவடைவது போலவே பிண்டத்திலும் நோய்க்கு மருந்து முடிவடைகின்றது என்பதை உணரும் பொருட்டே அவ்வாறு விளக்கிக் கூறலானேன்.

ராஜகோ: பூமியிலிருந்து கிடைக்கும் மருந்துப் பொருள்களைப் போலவே மனிதனது சரீரத்திலும் இருக்கின்றனவா? என்ன?

சாது: ஒரு சரியான வயதிலுள்ள ஒரு மனிதனின் சரீரத்தில் ஏழு சோப்புக் கட்டிகள் செய்யக்கூடிய கொழுப்பு இருக்கின்றது. ஒரு இரண்டங்குல ஆணி செய்யக் கூடிய இரும்பு இருக்கின்றது. ஒரு பெரிய கரண்டி நிறையக்கூடிய சர்க்கரை இருக்கிறது. சுவற்றில் நாலு அடி அடிக்கக் கூடிய சுண்ணாம்பு இருக்கிறது. ஐம்பத்தைந்து தீப்பெட்டிகள் செய்யக் கூடிய தீ பாஷாணமிருக்கின்றது. பதின்மூன்று காலன் தண்ணீரும் ஏராளமான கந்தகமும் மக்னீஷியம் என்ற ரசாயனப் பொருளுமிருக்கின்றது.

ராஜகோ: என்ன! என்ன! ஆச்சரியமாக இருக்கின்றதே பூமியிலிருந்து கிடைக்கக்கூடிய இத்தனை பொருள்களும் மனித சரீரத்திலுமல்லவா அடங்கி இருக்கின்றது. இந்த மர்மத்தை ஆராய்ந்தால் பல உண்மைகளைக் கண்டு தெளியலாம் போலிருக்கின்றதே,

சாது: சித்தாதி நூல்களை வாசித்துப் பார்த்தால் அண்டத்திற்குள்ளது பிண்டத்திற்கென்றும் பிண்டத்திற்குள்ளது அண்டத்திற்கென்றும் கூறுவதை அறியலாம்.

ராஜகோ: அப்படியானுல் அண்டமென்ருல் என்ன? பிண்ட மென்ருல் என்ன? என்று தெளியக் கூறவேண்டு கிறேன்.

சாது: இப்பூமியிலுள்ள அத்திப்பழம் போல் பேரண்டம். அதற்குள்ளமைந்த வித்துகள் போல் சித்தண்டங்கள்.

பிரிதிவி; அப்பு; தேயு; வாயு; ஆகாயம் என்ற ஐந்தினை யும் தன்னகத்தேகொண்டு இயங்குவதை அண்டமென்றும், அவைகளின் சகாயம் கொண்டு இந்தப் பூஉலகில் உயிர் வாழும் நம் தேகத்திதிற்குப் பிண்டமென்றும் நம் முன்னோர் கள் வகுத்துரைத்ததையே நானும் சொல்லுகின்றேன் கேள்.

அண்டத்தில் பிரிதிவி என்ருல் பூமி
பிண்டத்தில் பிரிதிவி என்ருல் மெய்

அண்டத்தில் அப்பு என்ருல் நீர்
பிண்டத்தில் அப்பு என்ருல் வாய்

அண்டத்தில் தேயு என்ருல் தீ
பிண்டத்தில் தேயு என்ருல் கண்

அண்டத்தில் வாயு என்ருல் காற்று
பிண்டத்தில் வாயு என்ருல் மூக்கு

அண்டத்தில் ஆகாயம் என்ருல் பரந்தவெளி
பிண்டத்தில் ஆகாயம் என்ருல் செவி

என்ருகும்.

ராஜகோ: அண்டத்தில் பிரிதிவி என்ருல் பூமி என்றீர்கள். அப்படியானுல் நாம் இப்போது வசித்துக்கொண் டிருக்கும் இந்நிலப்பரப்பாகிய பூமிதானே?

சாது: ஆமாமா.

ராஜகோ: பிண்டத்தில் பிரிதிவி என்ருல் மெய் என்றீர்கள்; அஃது இந்த மனித உடம்பு தானே

சாது: என்ன சந்தேகம் அதுவேதான்.

ராஜகோ: அண்டத்திற்குள்ளது பிண்டத்திற்கென்று சித்தாதி நூல்கள் கூறுவதாகச் சொன்னீர்களே அப்படியாஞல் நாம் வசிக்கும் இந்தப் பூமியில் எத்தனையோ வகை தாவர வர்க்கங்களிருக்கின்றனவே; அஃதே போன்று பிண்டத்திலும் தாவர வர்க்கங்களிருக்கின்றனவா?

சாது: இல்லாமலென்ன? சொன்னுல் விளங்கிக்கொள்கிருய்.

ராஜகோ: சொன்னுல்தான் விளங்கிக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றது என் அறிவு.

சாது: என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே என்று கூறியவர் யார் தெரியுமா?

ராஜகோ: எனக்குத் தெரியாதே

சாது: அவரைப்பற்றி உனக்கு எங்கே தெரியப்போகின்றது. நியூட்டனைக் கடவுள் தோற்றுவித்தார் அதன் பயனுகப் பிரபஞ்சத்தைப்பற்றிய விவரங்களை மக்கள் அறிந்தார்கள் என்று பாராட்டிப் பாடியுள்ளவர் யார்?

என்று கேட்டால் அலெக்ஸாண்டர் போப் என்ற பிரசித்திபெற்ற ஆங்கிலக் கவிவாணர் என்று உடனே விடையளித்து விடுவாய். அந்த உயர்தரக் கல்விச் சாலையிலிருந்து வந்தவன்தானே நீ. ஆனாலும் அப்பெரியாரைப்பற்றி இப்போதாவது தெரிந்துகொள்ளும்படியான சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக மனமகிழ்வடைகின்றேன். இந்த உலகினில் அதிலும் பாரத நாட்டில் மூவாயிரம் ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்து; ஆண்டுக்கொரு பாட்டாக மூவாயிரம் பாட்டுகளை எளிய தமிழ் மொழியிலே பாடியிருக்கின்றார். அவர் இயற்றிய அந்நூலுக்குத் திருமந்திரம் எனப்பெயரிட்டிருக்கின்றார். தமிழ் மொழியில் இயற்றிய பாட்டாயிற்றே! விஞ்ஞான காலம் நடந்து வருகின்றதே! காலத்திற்கேற்ற நூலாகவல்லவோ பார்த்து மேற்கோள் காட்ட வேண்டும். அதில் ஏது நவீன விஞ்ஞானம் என்று மட்டும் கேட்டுவிடாதே—.

வானசாஸ்திரத்தில் புகழடைந்தவர் கலீலியோ என்னும் விஞ்ஞானி. அவர் பாடுவா என்னுமிடத்திலிருக்கும்போது ஹாலந்து தேசத்திலிருந்து இவருக்கு ஒரு செய்தி எட்டியது. மூக்குக் கண்ணாடிக் கடையில் வேலைபார்த்து வந்த ஒரு பையன் இரண்டு கண்ணாடி வில்லைகளைச் சேர்த்து விளையாடிக்கொண்டிருந்தபோது தற்செயலாக அவற்றின் மூலம் தொலைவிலுள்ள பொருளைப் பெரியதாகப் பார்க்க நேர்ந்தது என்றும் உடனே அதைத் தன் எஜமானனுக்குக் காட்டியதாகவும் கலீலியோவுக்குச் சமாசாரம் தெரியவந்தது. அச்சோதனையைச் செய்து பார்க்க வேண்டுமென்று தோன்றியது. சோதித்துப் பார்த்ததில்

இக்கருவி வானசாஸ்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுமே என்று நினைத்தார். அவ்வாராய்ச்சியை செய்து பார்த்து வெற்றியும் அடைந்தார் என நூல்களின் மூல்யமாக அறி கின்றோம். இந்த மாதிரியான நவீனக் கண்டுபிடிப்புக்காக இன்றய விஞ்ஞான உலகம் என்ன பாடுபடுகின்றது. ஆனால் திருமூலர் இந்தக் கண்ணாடி கண்டுபிடிப்பின் ஆராய்ச்சியை எப்போதோ உணர்ந்து தெளிந்துவிட்டார். அவர் என்ன சொல்லுகிறார் என்று பாரேன்:

பூதக் கண்ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக் கண்ணாடியில் வேறே வெளிப்படு
நீதிக் கண்ணாடி நினைவார் மனத்துளன்
கீதக் கண்ணாடியிற் கேட்டு நின்றேனே.

என நான்கு வகைக் கண்ணாடிகளை சொல்லியிருக்கும் பெரியார்தான் அவர். நவீன விஞ்ஞானிகள் ஆரம்பித்த கண்ணாடி ஆராய்ச்சி போலவே திருமூலரும் பூதக்கண்ணாடி ஆராய்ச்சியிலிருந்து ஆரம்பித்து இன்றய டெலிவிஷன் கண்ணாடியாகிய கீதக் கண்ணாடிவரை சென்றுள்ளார். கீதக் கண்ணாடி என்பது தற்கால டெலிவிஷன் ஆகும்: ஆங்கிலத் திலுள்ள விஞ்ஞானப் பதங்களுக்குச் சரியான கலைச் சொற் களைக் கண்டுபிடித்து வருகிறார்களே அவர்கள் வேண்டு மானாலும் டெலிவிஷன் என்பதற்கு கீதக் கண்ணாடி என்று திருமூலர் சொன்னது எவ்வளவு பொருத்தமானது என்பதை ஆராய்ச்சி செய்து பார்க்கட்டுமே.

திருமூலர் திருமந்திர மென்பது இந்தப் புத்தகம்தான். இதில் ஒன்பதாம் தந்திரத்தில் முப்பத்திமூன்றுவது பாட்டை எடுத்து வாசி:

ராஜகோ: (புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு வாசிக்கிறான்)

இலையில்லை பூவுண்டினை வண்டிங் கில்லை
தலையில்லை வேருண்டு தாளில்லை பூவின்
குலையில்லை கொய்யு மலருண்டு கொய்யுந்
தலையில்லை தாழ்ந்த மயிர் புலராதே.

சாது: இந்தப் பாட்டை ஏன் வாசிக்கும்படி சொன்னேன் தெரியுமா? பிண்டத்திலும் தாவர வர்க்கம் இருக்கின் றனவா? என்று கேட்டாயே அதற்காகத்தான்.

மயிரை தாவர வர்க்கத்துக்கு ஒப்பாக திருமூலர் கருதி மேலே கண்ட கருத்தினைக் கொண்ட பாட்டை நம் சிந்தனை க்கு விட்டுப் பலவிதமான கருத்துகள் கொள்ள இடமளிக் காமல் விடுகதையும் போட்டு விடுவித்துமிருக்கிறார். **தாழ்ந்த மயிர் புலராதே** என்பதுதான் பாட்டின் வின விற்கு விடையாக அமைகின்றது.

பிண்டத்தில் பிரிதிவி என்றால் மெய் என்று சொன்னே னல்லவா? அஃதை கருத்தினில் கொண்டு; திருமூலர் வாக்கின்படி; தாழ்ந்த மயிரை மெய்யில் உற்பத்தியாகி யிருக்கும் தாவரமாகக் கருதி பாட்டின் கருத்துக்கு ஏற்ப அமைந்துள்ளதா? என சிந்தனை செய்து பார்;

பிண்டத்திலுள்ள தாவரமாகிய மயிருக்கு இலை இல்லை பூவுண்டு ஆனால் அந்தப் பூவிலிருக்கும் மதுவை உண்ணக் கூடிய வண்டினங்கள் அங்கில்லை. தலை இல்லை! ஆனால் வேருண்டு; தாளில்லை; பூவின் குலையில்லை ஆனால் கொய்யும் மலருண்டு கொய்யும் தலையில்லை: என்றுதான் கூறமுடியும் என்று சொன்னால் மட்டும் நீ திருப்தி அடைந்து

விடுவாய் என்று எண்ணவில்லை. ஆனதால் மேலும் கூறுகின்றேன். முன் சொன்ன பாட்டையே உண்டு இல்லை என்ற அட்டவணையில் எழுதி வாசித்துப் பார்!

இல்லை	உண்டு
இலை இல்லை பூவுண்டினவண்டிங்கில்லை தலையில்லை தாளில்லை பூவின் குலையில்லை	வேருண்டு
கொய்யுந்தலையில்லை	கொய்யும் மலருண்டு

இதிலிருந்து நீ என்ன தெரிந்துகொண்டாய்.

ராஜகோ: மயிருக்கு என்னன்ன உண்டு என்னன்ன இல்லை என்பதைத்தான் தெரிந்துகொண்டேன்.

சாது: இலை மறைவு தலை மறைவாக இருக்கவேண்டுமென்ற ஒரு பழமொழி தமிழ்நாட்டில் இன்றளவும் வழக்கச் சொல்லாகப் பேசப்பட்டு வருகிறது என்பதை நீ அறிவாயா?

ராஜகோ; எத்தனையோ சந்தர்ப்பங்களில் அந்த வார்த்தையை நானே சொல்லியிருக்கின்றேனே!

சாது: அ∴தே போன்று இங்கேயும் இலை மறைவு தலை மறைவு எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதைப்பார்.

தான் கருத்தினில்கொண்ட ரகசியமான காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால் இலை மறைவு தலை மறைவாக இந்த மெய்யாகிய மரம் அதாவது சடம் நடந்துகொள்ள வேண்டுமென்ற குறிப்பை உணர்த்தும் பழமொழிக்கேற்ப அமைந்துள்ளது என்பதை அட்டவணை நமக்குக் காட்டிக் கொடுக்கின்றது.

ராஜகோ: எனக்கு இந்த இடத்தில் ஒன்றுகேட்கவேண்டும் போல் தோன்றுகின்றது. கேட்கட்டுமா?

சாது: நன்றாகக் கேள்.

ராஜகோ; நாம் வெளிவிடும் கரியமில வாயுவாகிய விஷக் காற்றை தாவரங்களாகிய மரம் செடி கொடிகள் உட் கொண்டு அமிர்தமாகிய பிராண வாயுவை நமக்குக் கொடுக்கின்றது. அதனால்தான் நாம் எல்லோரும் ஜிவித்திருக்க முடிகின்றது என நவீன விஞ்ஞான நிரூபண மூல்யம் அறிந்துள்ளேன். அ∴தே போன்று மயிராகிய தாவரத்திலும் சுவாசித்தல் நடைபெற வேண்டுமல்லவா? அவை எந்தக் காற்றை சுவாசித்து எந்தக் காற்றை வெளிவிடுகின்றது மாந்தரைப்போல் உள்ள எந்த ஜிவராசிகள் சுவாசித்து ஜிவித்திருக்க முடிகின்றது?

சாது: தாவரங்கள் எவற்றின் மூல்யம் சுவாசிக்கின்றன?

ராஜகோ: தாவரங்களில் பெரும்பாலும் இலைகளின் மூலம் தான் சுவாசித்தல் நடைபெருகின்றது.

சாது: அப்படியானால் மயிராகிய தாவரத்துக்கு இலையுண்டா?

ராஜகோ: இலை இல்லை என்றுதான் முதலிலேயே தெரிந்து கொண்டேனே.

சாது; நவீன விஞ்ஞானிகள் தாவரவர்க்கங்கள் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி அவைகளின் செயல்களை ஆராய்ச்சியின் மூல்யம் நிதர்சனமாக்கிக் காண்பிக்கு முன்னமே! திருமூலர் தாவரவர்க்கங்களின் செயல்களை மிக நன்றே மெய்ஞானத்தால் உணர்ந்து மயிரை மெய்யிலுள்ள தாவரம் என்று சொல்லப்போகிறோமே பின்வரும் நவின விஞ்ஞான காலத்தில் சுவாசித்தல் முறை பற்றிய சர்ச்சைக்குரிய கேள்விகள் எழலாமல்லவா? என்பதை சிந்தித்து இலை இல்லை என்று சொல்லிவைத்த அருமை பெருமையை என்னென்று புகல்வது; மெய்ஞானிக்கு வருங்கால விஞ்ஞானமும் கூடத் தெரியுமா? என்று எண்ணவும் தோன்றுகின்றதல்லவா?

ராஜகோ: இலை இல்லை என்பதால் சுவாசித்தல் என்பது நடைபெறவில்லை என்றும் சொல்லிவிடலாமல்லவா?

சாது: சூனிய வெளியில் காற்று ஏது. அங்கு உற்பத்தியாகியுள்ள தாவரம் எவ்வாறு சுவாசிக்க இயலும்.

ராஜகோ: மயிர் சூனிய வெளியில் உற்பத்தியாகியுள்ள தாவரமா? அது என்ன புதுமை.

சாது: ஆகாசம் என்பதற்கு மயிர் என்ற பொருளை சித்தர்கள் அரும்பதவுரை வைத்திய அகராதியில் காணலாம். ஆகாசம் என்ருல் சூனியவெளி என்பதாக விஞ்ஞானிகள் விளக்கம் தருகிருர்கள். அங்கு காற்று இல்லை என்பதாகவும் கூறுகின்ருர்கள். மெய்ஞானியாகிய திருமூலரும் காற்றைப்பற்றிய சர்ச்சையை உணர்ந்து அண்டத்தைப் போலவே பிண்டத்துக்கும் ஆகாசமிருக்குமிடத்தை நாமெல்லாம் உணர்ந்து தெளிதல் வேண்டுமென்ற உட்கருத்தோடு திருமந்திரத்தில் கடைசி பாகமாகிய ஒன்பதாம் தந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்ற அதிகாரத்தில் முப்பத்திமூன்ரும் பாட்டாக அமைத்து சிந்தனையைத் தூண்டிய திருமூலரின் மெய்ஞானத்தால் உணர்ந்த விஞ்ஞானத் திறனை எப்படிப் போற்றிப் புகழ்வது.

எனவே நவீன கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இஃதை சிந்தை செய்து உண்மை நிலையை உணரப்போகிருர்கள் என்ற வருங்கால நிகழ்ச்சியை அறிந்து அஸ்திவாரமிட்டிருக்கின்றேன்.

ஆதலால் இந்த இடத்தில் இன்னென்றும் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கின்றது. கும்பகோணம் இந்திய சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலையிலிருந்து 1-2-59ம் தேதியில் வெளிடப்பட்டிருக்கும் மர்ம எண்ணும் எழுத்தும் என்ற என் ஆராய்ச்சி நூலை வாசித்துப் பார்த்தால் முப்பத்திமூன்ரும் பாட்டாக திருமூலர் அமைத்த உட்கருத்தை விளங்கலாம். முப்பத்திமூன்று என்ற எண்ணுக்கு அதில் கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்சாட்சர தத்துவ விளக்கத்தை

உணர்ந்தால் சூனியவெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நவீன அணுவிஞ்ஞானிகள் இன்னும் அநேக உண்மைகளைக் கண்டுபிடிக்க ஊக்கமளிக்க வல்லதாகும் என்பதாகவும் சொல்லுகின்றேன். ஆனதால் அதையும் நீ வாசித்துப் பார்க்கவேண்டும்.

ராஜகோ: இத்தனை சிறப்பியல்பினைக் கொண்ட இம்மூலியின் உண்மை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம்தான் என்னிடம் இப்போது நிலைபெற்றிருக்கின்றது.

மூலிகைக்குள்ளே முதல்தரமானது இம்மூலியே எனவும் முடிவுக்கு வந்துவிட்டேன். கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் போன்று வழி தெரியாமல் தவிக்கின்றேன். ஆனதால் என் குருட்டுக் கண்களை விழிப்படையச் செய்து வழி காட்டினாலன்றி இங்கிருந்து போவதாக இல்லை.

சாது: இதைப்பற்றிய விவரங்களை மேலும் அறிந்துகொள்ள ஆர்வமுடையவனாக இருக்கின்றாய். எனக்கும் மன மகிழ்ச்சியாய்த்தானிருக்கின்றது. ஆனால் வைத்தியத் துறையில் ஈடுபட்டுள்ளவனாக இருந்தால் அவனுக்கு பேருதவி அளிக்க வல்லதாகும்.

ராஜகோ: சுவாமி இதோ என் பக்கத்தில் மௌனமே உருவான நிலையில் அமர்ந்திருக்கின்றாரே வயோதிகப் பெரியவர் அவர் எனக்கு உறவு முறையில் தாத்தாவே தவிர அறிவில் குருவாவார் அவரும் சித்த வைத்தியத் துறையில் நீண்ட நாட்களாகவே ஈடுபட்டு வந்திருக்கும் அனுபவமுள்ள சித்த வைத்தியராவார்.

உலகமே என்னுடைய இல்லம். மனித சமுதாயமே என்னுடைய தோழன். அவர்களுக்கு நன்மை செய்வதே என்னுடைய கடமை என்று சொல்லிக்கொண்டே விடியற் காலை படுக்கையைவிட்டு எழவேண்டுமென்றும்: இரவு படுக்கையிலும் அவ்விதமே சொல்லி அதன்பின் உறங்கச் செல்லவேண்டுமெனவும் இளமை முதல் பழக்கப்படுத்தி வந்தார்கள். அப்போது அதன் கருத்தை என்னால் அறிந்து கொள்ளமுடியவில்லை. இப்போதுதான் உணருகின்றேன்.

கலாசாலைக்குப் போகும் அளவுக்குக்கூட என் படிப்புக்கு வசதி இல்லாத சூழ்நிலையிலிருந்தும் எப்படியோ என்னைப் படிக்கவைத்து ஒரு டாக்டராக்கிவிட்டார்கள்.

அவர்கள் ஏன் என்னை டாக்டராக்கினார்கள் என்பதை உணர்ந்துகொள்ள முன் சொன்ன தியானமே எனக்குப் போதுமான சான்றாக அமைந்துள்ளது.

சாது: நீ டாக்டரா! ரொம்ப சந்தோஷம். அப்படியானால் சொல்லுகிறேன் கேள். இதுகாறும் கேட்டுவந்ததை உணர்ந்து மயிரை மூலிகைக்குள்ளே முதல்தரமான மூலி என முடிவுக்கு வந்ததுபற்றி உளம் பூரிக்கின் றேன். அதில் நான்மட்டும் பங்குகொள்ளவில்லை. இதோ திருமூலரும் பங்கு கொண்டுள்ளார் என்பதைச் சொல்லுகிறேன் கேள்.

தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்த தென்னுள் ளன்புதானே–

திருமந்திரம்

இதில் தூநெறி மாறிக் கிடக்கும் வகை அறிவாரில்லை என்பதுதான் சிந்தனைக்குறிய திருவாக்கு. அவ்வாக்கையே மந்திர வாக்காகக்கொண்டு தூநெறி மாறிக் கிடக்கும் வகையைத்தான் இதுவறை விளக்கிவந்தேனென்பதைச் சொல்லாமலே விளங்கிக்கொள்வாய் என நினைக்கின்றேன்.

மேலும் காட்டுக் குறியும் கடந்தவர் காரணம் ஏட்டின் புரத்தில் எழுதிவைத் தென்பயன்? என்று திருமூலர் பிரிதோரிடத்தில் கூறுகின்றுர். ஆராய்ந்து அதன் உட்கருத்தை அறிந்தேன். ஏட்டின் புரத்தில் எழுதிவைத் தென்பயன் என்று கூறிய திருவாக்கை எண்ணி எண்ணி இறும்பூது எய்தினேன்.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்று நந்திஅருள் செய்தான்
ஆதி மருந்தென்று அறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணுதே

என்று குரு நந்தி அருள் செய்தான். சோதி மருந்தைக் கண்ட ஆனந்தத்தில் சொக்கித் திளைத்தேன். அம் மருந்தைப்பற்றி இன்று உன்னுடன் உரையாட வேண்டிய சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு என் சர்குருவை வணங்குகின்றேன்.

ராஜகோ: அந்த சோதி மருந்துக்கு வீர மருந்தென்றும்; விண்ணோர் மருந்தென்றும்; நாரி மருந்தென்றும் நந்தி அருள் செய்யக் காரணமிருக்க வேண்டுமல்லவா? அதை நான் தெரிந்துகொள்ளலாமா?

சாது: வருங்காலத்தில் நீ பெரிய சிந்தனைச் சிற்பியாக விளங்குவாய் என்பதை உன் வினாக்கள் மூலமாக அறிகின்றேன். ஆகையால் மனம் விட்டு உன்னிடம் சொல்லுகின்றேன்.

அவன் மயிரைக்கூட இவனால் பிடுங்கமுடியாது என்ற சொல் எப்போது எங்கே யாரால் உபயோகப்படுத்தப் படுகின்றது என்பதைக் கொஞ்சம் சொல் பார்க்கலாம்.

ராஜகோ: ஒரு மனிதனுக்கும் வேறொரு மனிதனுக்கும் சச்சரவு ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம், முதல்வனே பலமுள்ளவனாக இருக்கின்றான். அவனை எதிர்ப்பவனே பலமற்றவனாக இருக்கின்றான் என்பதைக் கருதும்போது முதல்வனின் வீரத்தைப் புலப்படுத்துவான் பொருட்டு அவன் மயிரைக்கூட இவனால் பிடுங்கமுடியாது என்று சொல்வதை இன்றைக்கும் நம் தமிழ்நாட்டில் வழக்கச்சொல்லான பழமொழியாக இருந்து வருவதைக் காணலாம்.

சாது: பழமொழிகளெல்லாம் புதுமொழிகளாக வேண்டுமென்று பாரதியார் கண்ட கனவு நினைவாகவேண்டுமல்லவா?

ராஜகோ: பழமொழியில் புதுமொழிதான் காண்கின்றேன்.

சாது: மனதில் ஏதோ ஒரு குறிக்கோளை முன்னிட்டு அஃது நிறைவேறும் காலம்வரை தாடி மீசையை எடுப்பதில்லை என்ற வைராக்கிய விரதம் பூண்டுள்ளவர்கள் இன்றைக்கும் நம் நாட்டில் எத்தனையோபேர்களிருந்து வருகிறார்கள் அவர்கள் கொண்ட குறிக்கோள்

நிறைவேறிவிட்டால் அதற்கென்று வைத்த தாடி மீசையை எடுத்துவிடுகிறார்கள்.

இதிலிருந்து நாம் அறியவேண்டுவது என்னவெனில் மயிருக்கு வீரத்தைப் புலப்படுத்தும் தன்மையைக்கொடுத்து உள்ளப்பிணியை நீக்கியதால் அம்மருந்தை வீர மருந்தென்று சொல்லலாமல்லவா?

அஃதே போன்று உடல்பிணியை நீக்கவல்ல மாமருந்தாக மயிரினை சித்தர்கள் கருதியதால் வீரமருந்தென்று தாந்திரீகக் குறிப்பால் உணர்த்தலானார்கள்.

அஃதையே விண்ணோர்கள் மருந்தென்று சொன்னதின் காரணம் என்னவெனில் விண்ணோர்களென்றால் ஆகாயத்திலிருக்கப்பட்டவர்கள். அவர்கள் அழியா நிலையுடையவர்கள். அத்தகைய அழியா நிலையைக் கொடுக்கவல்ல சக்தி வாய்ந்தது இம்மருந்து என்பதால் விண்ணோர்கள் மருந்தென்றார்.

நாரி மருந்தென்று சொன்னதின் உட்கருத்து என்னவெனில்:— நாரி என்றால் பெண்மணியைக் குறிப்பதாக அறியலாம். மேலும் ஒரு மருந்தை முடிக்கவேண்டுமானால் அதன் சத்துருவால் கட்டி மித்துருவால் குருவாக்கவேண்டுமென்று சொன்னேனல்லவா? அஃதே போன்று மயிர் மருந்தாக வேண்டுமானால் அதற்குறிய சத்துரு முலைப்பாலாகும், அப்பால் பெண்களிடமிருந்துதான் பெறவேண்டியிருக்கின்றது. அதன் உதவி இல்லாமல் வேறு எவ்வகையேனும் மருந்து முடிக்க இயலாது என்பதால் நாரி மருந்தென்றார்.

ராஜகோ: ஒரு மருந்தின் சத்துரு மித்துரு தெரிந்துகொள் ளாமல் மருந்து செய்வது இயலாது என்றல்லவா தெரிகின்றது.

சாது: மருந்து மட்டுமா? இந்த உலகம் அழியாமல் நிலைத் திருப்பதற்குக் காரணமும் செயலாற்றுவதற்குக் காரணமும் என்ன தெரியுமா? வான மண்டலத்திலே சஞ்சரிக்கும் சூரியன்; சந்திரன்; செவ்வாய்; புதன்: குரு; சுக்கிரன்; சனி யாகிய கிரகங்கள் ஒன்றுக் கொன்று சத்துரு மித்துருத் தன்மை பெற்று இயங்கு வதாலேதான் இந்த உலகம் அழிவுருது செயலாற்று கின்றது.

ராஜகோ: கிரஹங்களைப்பற்றி ஆராய்ந்து அதன் சத்துரு மித்துருத் தன்மையை அறிந்துகொள்ள வேண்டு மென்ற ஆர்வம் எனக்கு இப்போதுதான் ஏற்பட் டிருக்கின்றது.

சூரியனில்லாவிட்டால் இந்த உலகத்திலுள்ள ஜீவராசி கள் நசித்துவிடுமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றூர் களே? அஃது எவ்வளவு தூரம் உண்மை என்பதை யும் அறிந்துகொள்ளவேண்டும். அதனுல் சத்ரு மித் ருக்கள் சேர்வதால் சூரியன் எவ்வாறு மருந்தாகி உலக ஜீவராசிகளை உய்விக்கின்ருன்?

சாது: இந்த உலகத்தில் நீ பிறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்?

ராஜகோ: என் தாயும் தகப்பனும்.

சாது: தாய் தகப்பனிடம் உன் பிறப்புக்குக் காரண கர்த்தா வாக இருந்த இரண்டு வஸ்த்துக்கள் என்னவென்று உனக்குத் தெரியுமா?

ராஜகோ: விந்து நாதம் தானே?

சாது: விந்து புருஷனிடமும் நாதம் பெண்ணிடமுமிருக்கின்றது. அஃது எவ்வாறு செயலாற்றுகின்றது என்பதை அறிவாயா?

ராஜகோ: அதை அறிந்து சொல்லக்கூடிய சக்தி என்னிடமில்லை.

சாது: சூரியனை பிறவியை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மருந்துப் பொருளாக வைத்துக்கொள். அம்மருந்து செயலாற்றவேண்டுமானால் சத்துரு மித்துருத் தன்மை பெறவேண்டும். அதற்குச் சத்துரு விந்துவாகவும் மித்துரு நாதமாகவும் கொள். இவ்விதமாக விந்துநாத சேர்க்கையால் சத்துரு மித்துரு தன்மை பெற்று முடிந்த மருந்தால் உண்டானது கரு என்ற பிண்ட உற்பத்தி மருந்தாகும் என்று கொள். இப்போது விந்து நாதத்தைப் பற்றி அறிந்துகொண்டுவிட்டதாகத் திருப்தியடைகின்றாயல்லவா?

ராஜகோ: சூரியனுக்கு விந்து நாதங்கள் எப்படி சத்துரு மித்துருவாகும்?

சாது: உனக்கு ஜோதிஷ சாஸ்திரம் தெரியுமா?

ராஜகோ: ஜோதிஷ சாஸ்திரத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை.

சாது: வான சாஸ்திரத்தில் உனக்கு நம்பிக்கை இருக்கின்றதா?

ராஜகோ: வானசாஸ்திரத்தை நம்பித்தானே இன்றைய விஞ்ஞான உலகம் முன்னேறிக்கொண்டிருக்கின்றது. அப்படி இருக்கும்போது நான்மட்டும் அதை எப்படி நம்பாமலிருக்கமுடியும்.

சாது: வான சாஸ்திரமும் ஜோதிஷ சாஸ்திரமும் வேறுபட்டதல்ல. இரண்டும் ஒன்றேதான். வான சாஸ்திர ஆராய்ச்சி ஜோதிஷ சாஸ்திர ஆராய்ச்சியில் கொண்டு போய் விடப்போகின்றது. அதை இப்போது நான் சொன்னால் இந்த உலகத்திற்குப் பயித்தியக்காரத்தனமாய்த்தான் தோன்றும். வானசாஸ்திர ஆராய்ச்சியில் புகுந்திருக்கும் ஆராய்ச்சியாளர்கள் உண்மையை நிதர்சனமாக வெளியிடும்போதாவது உணர்ந்து கொள்ளட்டும்.

ராஜகோ: சூரியனுக்கும் ஜோதிஷ சாஸ்திரத்துக்கும் என்ன சம்மந்தமிருக்கின்றது? விந்து நாதங்களுக்கு அதில் என்ன செயலிருக்கின்றது?

சாது: ஜோதிஷ சாஸ்திரத்தில் சூரியனை பிதுர் காரகனாகவும் சந்திரனை மாதுர்காரகனாகவும் கூறப்பட்டிருக்கின்றது:

ராஜகோ: பிதுர் காரகன் மாதுர் காரகன் என்றால் என்ன?

சாது: பிதாவுக்குரிய செயலை அளிப்பதால் சூரியனை பிதுர் காரகனென்றும் மாதாவுக்குறிய செயலை அளிப்பதால் சந்திரனை மாதுர் காரகனென்றும் கூறப்படுகின்றது.

ராஜகோ: அப்படியானால் சூரியனும் சந்திரனும் நாத விந்துக்களா?

சாது: ஆமாம்.

ராஜகோ: அப்படியானால் இதில் சத்துருமித்துருத்தன்மை உண்டா?

சாது: இல்லாமலென்ன ஜோதிஷ சாஸ்திரப்படி சூரியனுக்கு சுக்கிரன் சனி இவர்கள் சத்துரு. செவ்வாய்: குரு; சந்திரன் இவர்கள் மித்துரு.

ராஜகோ: சூரியனுக்கு இந்தக் கிரஹங்கள் சத்துரு மித்துரு வானதால் உண்டான பயன் யாதோ?

சாது: சுக்கிரனைக் களத்திரகாரகனாகவும்: சனியை ஆயுள் காரகனாகவும்; ஜோதிஷ சாஸ்திரம் கூறுகின்றது. களத்திரகாரன் என்பது களத்திரத்துக்கு அதிபதி என்றபொருளை உணர்த்துகின்றது. ஆதலால் களத்திர மாக வரும் ஸ்திரிக்கு நாயகனாக வரும் புருஷனுக்கு சூரியன் சத்துருவாகின்றபடியால் சத்துருவுடன் சேர்ந்த மருந்து பொருளாகிய சூரியன் புதிய ஒரு நோயை உண்டுபண்ணுகின்றது அதற்குக் காமநோய் என்று பெயர்.

ராஜகோ: அந்நோய் நீக்கத்திற்கும் மருந்திருக்க வேண்டு மல்லவா?

சாது: இந்த இடத்தில் நான் முன்னமே சொல்லிவந்ததை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். எங்கே எதை ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறேன். என்பதைச் சொல் பார்க்கலாம்.

ராஜகோ: சற்று யோஜித்துவிட்டு நோயுண்டாவதற்குக் காரணமாக இருந்த உமிழ் நீரையும் மலத்தையும் சத்துரு வென்றும் அதனுல் உண்டான நோய்க்கு நோய் தீர்க்கும் மருந்தாக உமிழ் நீரையும் நெருப்பையும் குறிப்பிட்டதை இப்போது நினைவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்.

சாது: உன் அறிவின் திறனைக்கண்டு மெச்சுகின்றேன். மேலும் நான் செல்லிவரும் ஒவ்வொரு விஷயங்களிலும் நீ உன்னிப்பாக இருந்து வருவதையும் அறிகின்றேன். நான் எதற்காக இதை ஞாபகப்படுத்திக் கொள் என்று சொன்னேன் தெரியுமா?

ராஜகோ: ஒன்று நோய் செய்யும் பார்வை மற்றொன்று அந் நோய்க்கு மருந்தான பார்வை என்று முன்னமே வள்ளுவர் குறள் காமத்துப் பாலிலிருந்து எடுத்துக் கூறிய ஒப்பு உவமைத் தத்துவத்தை உற்று நோக்கும் பொருட்டு.

சாது: அப்படி உற்று நோக்கியதால் கண்ட உண்மைப் பொருள் என்ன?

ராஜகோ: முப்பிணிகளுக்கு மருந்துகள் வேறேயுள்ளன. ஆபரணத்தையுடையவள் தன் காம நோய்க்குத் தானே மருந்தானுள் என்பதை வள்ளுவர் குறள் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்திலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்ட மேற்கோள்களிலிருந்து அறியலானேன்.

சாது: புணர்ச்சி மகிழ்தலால் காம நோய் நீங்கிவிடுகிறது என்பதை சூரிய கிரணங்களாகிய மருந்துப் பொருள் புருஷனது விந்துவில் கலக்கப்பட்டதால் ஏற்பட்ட காமநோய் புணர்ச்சி மகிழ்தலால் நீங்கப்பெறுகிறது என்றும் சொல்லலாமல்லவா?

ராஜகோ: ஆமாம் அது எப்படி!

சாது: சூரியனும் சுக்கிரனும் ஒருவருக்கொருவர் சத்துருவானதால் ஏற்பட்ட காமநோய் தீர மித்துருவால் சாத்தியப்படவேண்டும். சூரியனுக்கு சந்திரன் மித்துருவென்றும் மாதுர்காரகனென்றும் ஜோதிஷ சாஸ்திரம் கூறுகின்றது. மாதாவிடம் நாதமிருக்கின்றது. எனவே மாதா பிதா கூடி புணர்ச்சி மகிழ்தல் நடைபெறுவதால் காமநோய் நீங்கப்பெறுகின்றது.

ராஜகோ: ஒரு மருந்தை முடிக்க அதன் சத்துருவால் கட்டி மித்துருவால் குருவாக்க வேண்டுமென்றீர்கள். அப்படியானல் புணர்ச்சிமகிழ்தல் முடிந்தபின் குரு மருந்து முடிந்தது என்பதற்கு என்ன ஆதாரமிருக்கின்றது?

சாது: சிந்தனையைக் தூண்டக்கூடிய நல்ல கேள்விதான். நீ ஒரு டாக்டரல்லவா? நோயுற்ற ஒருவன் நோய் நீக்கம் பெற வேண்டி உன்னிடம் மருந்து சாப்பிட வருகிறனென்று வைத்துக்கொள். அப்போது அவன் வியாதிக்குறிய மருந்து கொடுக்கின்றாய். முற்றிலும் குணமாவதற்குள் அவன் எத்தனையோ தடவை மருந்து சாப்பிடவேண்டியிருக்கின்றது. அப்படி மருந்து சாப்பிட்டு வருவதில் சில நோயாளிகளுக்கு வியாதி

குணமாகும் கால அளவு நீடித்தோ குறைந்தோ ஆவதை நீ அறிவாய். குறிப்பிட்ட சில நோயாளிக்கு மருந்து கொடுத்தும் குணமாகாமல் போவதையும் அறிவாய். அஃதே போன்று புணர்ச்சி மகிழ்தலால் காமநோய் நீங்கப்பெறுகிறதாக அறியலாம். ஆனாலும் அந்நோய் மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே தானிருக்கின்றது. அவ்வப்போதெல்லாம் புணர்ச்சி மகிழ்தல் நடந்துகொண்டுதானிருக்கின்றது. என்றோ ஒரு நாள்தான் அதனால் கற்பகாலம் நிகழ்கின்றது. புத்திரப்பேறு அடைவதற்குறிய யோக்யதையைப் பெறமுடிகின்றது. அந்த நாத விந்துக்களான மருந்துக் கலவை அன்றுதான் சேர்ந்ததாகின்றது. அப்படி முடிந்த மருந்தைத்தான் குருவென்று சொல்லலாம்.

ராஜகோ; குருவென்பதற்கு ஜோதிஷ சாஸ்திரத்தில் என்ன விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

சாது: குருவை புத்திரகாரகனென்றும் சூரியனுக்கு மித்துருவாகவும் கூறுகின்றது.

ராஜகோ: குருவே புத்திரகாரனென்று விளங்கிக்கொள்வதற்கு இத்தனை மேற்கோள்கள் காட்டாவிட்டால் என்னால் சற்றுவது புரிந்துகொள்ளவே முடியாது. அதனால் இப்போதுதான் எனக்கு ஜோதிஷ சாஸ்திரத்தில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது எவ்வளவு அரிய பெரிய தத்துவங்களெல்லாம் அதில் அடங்கி இருக்கிறதென்பதை ஆராய்ச்சி செய்து பார்த்தாலல்லவோ தெரிகின்றது. நவீன விஞ்ஞானிகள் வெகு நீண்ட பிரயாசை எடுத்துக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக

அறிவிக்கப்போகும் வானசாஸ்திர நவீன விஞ்ஞான செயல்களை நாமும் முன்னறிவிப்புச் செய்ய இயலும் போல் தோன்றுகின்றதே!

சாது: பாரத நாட்டுக் கலைகளில் இல்லாத புதிய எதையுமே விஞ்ஞானத்தால் சாதிக்கவில்லை எனச் சொல்லலாம். ஆனாலும் ஏன் அவை பிற்பட்டுவிட்டதாக நமக்குத் தெரிகின்றதென்றால் நமக்கு முன்னுள்ளோர்கள் எப்படி வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் செய்த செயல்கள் என்ன என்பதை நமக்கு ஆதாரமாக எழுதிவைத்துப் போயிருப்பதில் நாம் கவனமே செலுத்தாமல் புதியன புகுந்துவிட்டதால்தான்.

ராஜகோ: அப்படியானால் மாதா; பிதா; குரு; தெய்வம் என்று சொல்லுகிறார்களே? அங்கே சொல்லப்படுகின்ற குருவுக்கும் சற்று முன்னமே குரு என்று கண்ட ஆராய்ச்சியின் விளக்கத்திற்கும் உள்ள தன்மையை விளக்க வேண்டுமே!

சாது: நாத விந்துக்களே மாதா பிதா எனவும்; சூர்ய சந்திரர்களென்றும் அவைகளின் சேர்க்கையால் உண்டான புத்திரனே குருவானதாகவும் அறிவாய்.

வாழ்க்கை நடைமுறையில் குருவினிடமிருந்து அறிவு உதயம் பெறுகிறோம். அஃதே போன்று நாத விந்துக்களின் சேர்க்கையாலுண்டான அறிவு உதயமான பிண்டமாகிய உடம்பைப் பெற்ற உன்னை குருவென்று கூறாமல் வேறு என்னவென்று சொல்வது; குரு என்பதற்கு அறிவு உதய கர்த்தா எனவும் கூறலாம்.

இதன் விளக்கத்தை மிக மிக நன்றே உணத்துகின்றூர் திருமூலர்:—

அறிவு வடிவென்று அறியாத என்னை
அறிவு வடிவென்று அருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென்று அருளா லறிந்தே
அறிவு வடிவென் றறிந்து இருந்தேனே.

எளிய முறையில் சொல்லப்பட்டிருக்கும் இந்தப் பாட்டிற்கும் அரும்பதவுரை விளக்கம் வேறு சொல்ல வேண்டுமா? என்று கேட்கின்றேன்.

இஃதையே இன்னும் சற்று விளங்கும்படியாகவும் சொல்லுகிறேன் கேள்.

முருகப்பெருமானை தகப்பன்சாமி என்று சொல்வதை நீ கேள்விப்பட்டிருக்கின்றூயா? அதைப்பற்றி நீ என்ன நினைக்கின்றூய்?

ராஜகோ: கேள்விப்பட்டிருக்கின்றேன். சுவாமிமலைக்குக் கூடச்சென்று முருகப்பெருமானை வழிபட்டு வந்திருக்கின்றேன். அங்கே ஸ்ரீ முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமான் தன் புத்திரனையே குருவாகக்கொண்டு உபதேசம் பெற்றூராம். அதை நினைவுறுத்துவான் பொருட்டு ஏற்பட்ட கோவில்தான் அங்கே இருப்பதாம். அந்தக் கோவிலின் பிரகாரத்தில் முருகனிடம் சிவபெருமான் உபதேசம் பெருவதாகப் படம்கூட எழுதியிருக்கிறூர்கள். அப்போது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை; ஆனுல் இப்போதுதான் அதன் உண்மைத் தத்துவநிலை புரிகின்றது. சொல்லட்டுமா?

சாது; நன்றுகச் சொல் அதைக்கேட்டு ஆனந்தப்படத் தானே நானிருக்கின்றேன்.

ராஜகோ: தமிழ் நாட்டிலே முருகனை அறிவு வடிவமான தெய்வமாகக் கருதி வழிபடுகின்றூர்கள். அறிவு உதயம் எது என்பதற்குத்தான் ஏற்கனவே விளக்கம் கொடுத்துவிட்டீர்கள். அதன் படி சிவபெருமான் முருகனை தன் மைந்தனுகக் கருதி வணங்கவில்லை. அவனே நான்; நானே அவன் என்ற அறிவு உதயத்தைக்கண்டு வணங்கினுர் என்றுதான் கொள்ள வேண்டும்.

சாது: அப்படியானுல் தெய்வம் என்றது எது?

ராஜகோ: அறிவு உதயமாவதற்கு அதாவது கரு உதயமாவதற்குக் காரண கர்த்தாவாகி சத்துரு மித்துருவுடன் சேர்ந்து திருவிளையாடல் புரிந்து பிறவியைத் தந்த மூலப்பொருளே தெய்வமென்பது.

பிரணவ நிலையின் உட்கருத்தை இன்னதென அறிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள் சிந்தையில் கொண்டு தெளிக.

சாது: அப்படியானுல் தெய்வத்தை பல ரூபபேதகங்களாகக் கருதி வழி படுவானேன்?

ராஜகோ: அதற்கு வழியறியாமல்தான் எத்தனையோ பூசல்களில் ஈடுபட்டு குழப்பமே ஏற்பட்டிருக்கும் ஒன்றிற்கு நான் எப்படி பதில் சொல்லமுடியும்.

சாது: அதைப்பற்றி நீயோ அல்லது நானே ஆராய்ச்சியில் இறங்கிக் குழப்பிக்கொள்ளாமல் மூலன் வழிசென்று முடிவு எதுவாக இருக்கலாமென்று பார்ப்போம்!

ராஜகோ: திருமூலர் என்ன சொல்லுகின்றூர்.

சாது: நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன் — என்று குறிப்பிடுகின்றார்.

[திருமந்திரம் 9ம் தந்திரம் தோத்திரப்பகுதி]

ராஜகோ: நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன் என்பதை நாம் எப்படி காண இயலும்.

சாது: ஏன் காண இயலாது? அறிவு உதயமானவன் நீ என்பதை மறந்து பேசலாமா? முப்பட்டைக் கண்ணாடியை முதன் முதலில் கண்டுபிடித்தானே ஒருவன் அவன் எந்த நோக்கத்தோடு கண்டுபிடித்தானோ நாம் அறியோம்.

ஆனால் திருமூலர் சொன்ன வாக்கை மெய்பிக்க இப்போது எனக்குக் கிடைத்த ஆயுதமாகவே கருது கின்றேன்.

அந்த முப்பட்டைக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு சூரியன் ஒளிபடக் காட்டினால் பச்சை மஞ்சள் சிகப்பு; ஊதா; வெள்ளை போன்ற பல நிறங்கள் பூமியில் விழுவதிலிருந்து நிறம் பல வண்ணனைக் காணலாம்.

மேலும் நவீன விஞ்ஞான யுகத்தில் கடவுள் ஒருவரா பலரா? என்றெல்லாம் கேள்விகள் எழப் போகின்றது. விஞ்ஞான அறிவு மெய்ஞானத்தில்தான் கொண்டுபோய் விடும் என்பதை அவர்கள் அறவே மறந்துவிட்டுப் பேசுவார்கள். முப்பட்டை கண்ணாடியில் ஆரம்பித்த விஞ்ஞான ஆராய்ச்சி முடிவும் முதலு மில்லாத ஆண்டவனைத்தான் தேடப்போகின்றது என்பதை மெய்ஞானத்தால் உணர்ந்து முன்னறிவுப் புச்செய்யும் வண்ணம்! நிறம்பல எவ்வண்ணம்

அவ்வண்ணம் ஈசன் என்ற ஆணித்தரமான பதிலை நமக்களித்துள்ளார் போலும்.

இஃதை நமக்கெல்லாம் உபதேசிக்கும் வண்ணம் திருமந்திரம் முதல் தந்திரம் உபதேசம் முதல் பாட்டு முதல் வரியில் "விண்ணின்றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு" என்று சொன்ன திருவாக்கை இங்கே ஊன்றிக் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனித்தால் அறிவு உதயமாவதற்கு அதாவது கரு உதயமாவதற்குக் காரண கர்த்தாவாகி சத்துரு மித்துருவுடன் சேர்ந்து திருவிளையாடல் புரிந்து பிறவியைத் தந்த மூலப்பொருளான தெய்வமேதான் நான். நான் வேறு தெய்வம் வேறல்ல அவனேதான் நான் என்று மெய்ப்பிக்கவே பல நிறமுடைய மாந்தர்களாக இந்த உலகில் உற்பத்தியானர்கள் என்ற முடிவுக்கும் வரலாம். நிறத்தில் வேறு பட்டவர்களேயல்லாது இனத்தில் ஒன்றுபட்டவர்கள்தான் என்பதைச் சுட்டிக் காட்டுவான் பொருட்டு திருமூலர் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று கூறலானர். இதையறியா மாந்தர்கள் ஏனே உண்டு இல்லை என்ற பிரச்சனையில் இறங்கி தாங்கள் அறிவுதயமானவர்கள் என்பதை மறந்து அறிவற்ற நிலைக்கு ஆக்கிக்கொள்கின்றார்களே!

ராஜகோ: எனக்கொரு சந்தேகம் கேட்கட்டுமா?

சாது: தாராளமாகக் கேள்.

ராஜகோ: நான் வேறு தெய்வம் வேறல்ல. அவனேதான் நான் என்று எண்ணுவதற்கான ஆதாரங்களை காட்டினீர்கள். அப்படியானல் ஈசனுக்கும் இறப்புத் தன்மை உண்டா?

சாது: சிந்தனையைத் தூண்டும் கேள்விதான்? சொல்லுகிறேன் கேள்.

முப்பட்டைக் கண்ணாடியின் உதவி இல்லாமல் சூரியனை நாம் காணும்போது சூரியனின் நிறம் தூய வெண்ணிறமாக இருக்கின்றது. பலவித நிறச்சேர்க்கை கொண்டது தான் அந்தத் தூவெள்ளை என்று அப்போது நினைப்பதில்லை ஆனால் முப்பட்டைக் கண்ணாடியின் உதவியால் பார்க்க நேரும்போது பலவித வர்ணச் சேர்க்கையைக் காண்கின்றோம் எனக் கண்டோம். அவ்வண்ணச் சேர்க்கை பெற்ற ஒளி தரையில் படும்போது அந்த ஒளி பல நிறங்களில் காணப்படுகின்றது. முப்பட்டைக் கண்ணாடியை அப்புறப் படுத்திவிட்டால் அந்த வர்ணங்களை திரும்ப பூமியில் பார்க்க முடியவில்லை ஆனதால் வர்ணச் சேர்க்கைதான் அழிந்ததாக நம் கண்கள் காட்டுகின்றதே தவிர, சூரியனே அழிந்துவிட்டானென்று காட்டவில்லை. அஃதே போன்று பலவித நிறத் தோற்றத்தைக்கொண்ட இந்த உடம்புதான் அழியுறுவதாகக் காண்கின்றோமே தவிர இந்த உடம்புடன் கூடவே இருந்த உயிர் அழியுறுவதாக எண்ணக்கூடாது. ஏன் எனில் பலவிதமான வர்ணச் சேர்க்கைகள் தோன்றி மறைந்தாலும் திரும்பவும் முப்பட்டைக் கண்ணாடியின் உதவியினால் காண இயலும் என்ற ஆதாரத்தை நாம் நம்பும்போது முப்பட்டைக் கண்ணாடிக்கு ஒப்பான நம் உடம்பு தனித்திருந்தால் செயலற்றிருக்கின்றது. ஆனால் கரு உதயமாவதற்குக் காரண கர்த்தாவாகி சத்துரு மித்துருவுடன் சேர்ந்து திருவிளையாடல் புரிந்த மூலப்பொருளான தெய்வம் நம்முடன் சேர்ந்திருக்கும்போது இந்தப் பிண்டம் செயலாற்றுகின்றது. எப்போதுமே நிலைத்திராமல் நம்மை

விட்டு ஏன் பிரிந்து செல்கின்றது என்று கேட்டால் அறிவு உதயமாகிய உன்னை நான் என்ற அகங்காரத்தால் அறிவற்ற நிலைக்கு ஆக்கிக்கொள்ளுவதால், அறிவு உதயமான தெய்வம் உன்னைவிட்டு அகன்றுவிடுகின்றது. அதன் காரணத்தை உணராமல் இறப்பு நிலை ஏற்படுகின்றது என்று சொல்லுகின்றோம்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே.

என்று சொன்ன திருமூலர் திருவாக்கை மேற்கொண்டு

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

என்று சொன்ன திருவாக்கிற்கேற்ப தன்னை ஆக்கிக் கொண்டால் அழிவைப்பற்றி ஏன் எண்ணப்போகின்றோம்.

ராஜகோ: உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்று திருமூலர் கூறுகின்றாரே அதனால் உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்த விதத்தைத் தெரிந்து அதன் வழி நடக்க எனக்கு வழி காட்டவேண்டும்.

சாது: சாகா மூலி என்று ஒரு மூலி இருக்கின்றதே அது உனக்குத் தெரியுமா?

ராஜகோ: சாகா மூலியா! அதைப்பற்றி நான் கேள்விப் பட்டதுமில்லை எனக்குத்தெரியவும் தெரியாது. இருக்கு மிடத்தைச் சொன்னால் கொண்டுவந்துவிடுகின்றேன்.

சாது: அம்மூலி இருக்குமிடத்தைப்பற்றி திருமூலர் சொல்லு கின்றார் அதையே நானும் சொல்லுகின்றேன் கேள்; ' நீரின்றிப் பாயும் நிலத்தினில் பச்சையாம்'' என்ன பொருள் தெரியுமா? நீரே இல்லாத இடத்தில் நீர்பாய் கின்றதாம் அந்நிலத்திலே முளைத்திருக்கும் மூலியும் பச்சையாகவே அதாவது காயாத தன்மை பெற்று இருக்கிறதாம்: நீரில்லை என்பதால் காய்ந்துபோய்விட வில்லையாம்: அம்மூலி முளைத்திருக்கும் இடத்தைத் தேடிப்போய் கண்டுபிடித்துக்கொண்டு வந்தால் உடம்பை வளர்த்து உயிரை வளர்ப்பதற்கு மருந்து செய்து தருகிறேன்.

ராஜகோ: சாகா மூலி பற்றிய சர்ச்சையில் இறங்கி என்னைத் திண்டாடவிட வேண்டாம் - அம்மூலி எதிரே இருந் தாலும் என் குருட்டுக்கண்களுக்குத் தென்படாது.

சாது: மூலிகைக்குள்ளே முதல்தரமான மூலி என்று சொன்னாயே அது எது?

ராஜகோ: ஆராய்ச்சியின் வாயிலாக மயிரைத்தான் முதல் தரமான மூலி எனக்காணும் வாய்ப்புக் கிடைத்தது.

சாது: அதுவேதான் சாகாத மூலியுமாகும்.

ராஜகோ: சாகாத மூலி என்ற பெயர் அதற்கு எவ்வாறு தகும்.

சாது: சாகாத மூலி என்றால் அந்த மூலிகைக்கு இறக்கும் தன்மையே இல்லை என்றாகின்றதல்லவா? பூமியில் முளைக்கும் மூலிகைகள் இறக்கும் தன்மை பெற்றவை யாகவே இருக்கின்றன. ஆனால் பிண்டமாகிய பூமியில் முளைத்திருக்கும் மூலியாகிய மயிருக்கு இறக்கும் தன்மை இல்லை. வேண்டுமானால் மயிரை பிண்டத்திலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வைத்துப் பாருங்கள். மயிர் முன் வைத்த நிலையிலேயேதானிருக்கும் என்பதை அறிந்துகொள்ளலாம். இதனால்தான் அதை சாகாமூலி என்று சொல்லுவதற்குப் பதிலாக நீரின்றிப்பாயும் நிலத்தினில் பச்சையாம் என்று திருமூலர் தாந்திரீகக்குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

வைத்தியத்தின் தந்தை என விளங்கும் அகஸ்திய மாமுனிவர் பச்சை என்று கூறும் மருந்து எதுவாக இருக்கலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்கி பலவிதமாக அப்பதத்திற்குப் பொருள்கொண்டு முடிவுகாண முடியாமல் பலர் தவிக்கின்றார்கள். ஆனதால் நான் இதுவரை சொல்லி வந்த ஆதாரங்களை எல்லாம் மனதில் கொண்டு தெளிந்தால் அகஸ்தியர் பச்சை என்று சொன்னதும் இச்சாகா மூலியாகிய மயிரே என்று முடிவுக்கு வந்து; சித்தர் பரம்பரையின் சகாப்தத்தை மீண்டும் தோற்றுவிப்பார்களென்றே எண்ணுகின்றேன்.

அப்பெரு நோக்குக்கொண்டே எம் குருநாதன் எனக்கு உபதேசித்த அரும் பெரும் ரகசியத்தை மனப்பூர்வமாக உன்னிடம் சொல்லலானேன்.

ராஜகோ: சாகாத மூலியைக்கொண்டு மருந்து செய்வது எவ்வாறு?

சாது: முப்பு என்னும் அணுமருந்தைச் செய்து கற்பம் உண்ணும் முறைப்படி உட்கொண்டால் உடலை வளர்த்து உயிரினை வளர்க்க முடியும் என சித்தாதி நூல்கள் கூறுகின்றன. அதற்கு குரு மருந்து எனவும் பெயரிடப்பட்டிருக்கின்றது. சித்தாதி நூல்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் மருந்துகள் குறிப்பிட்டபடி வேலை செய்ய வேண்டுமானால் அத்துடன் முப்பு என்னும் அணுமருந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலக்க வேண்டும் என்பதாகவும் அறியலாம்.

முப்பு என்றவுடனே உப்பைக்கொண்டு முப்பை முடித்துவிடலாமென்றெண்ணி உப்பைச் சுட்டுக் கெட்டவர்கள் எத்தனையோபேர்கள். சித்தர்கள் வைத்த உப்பு வகை தெரியாமல் கற்றுமாய்ந்தது அநேகம் கோடிதான் என்றும்; கோவானூர் பூமியிலே சாகா மூலி படர்ந்திருக்கு என்றும்; சொன்ன சித்தர் பாட்டை ஞாபகத்துக்குக் கொண்டுவந்திருந்தால் உப்பு என்பது என்ன என்பதைப்பற்றி ஆராய்ந்தபின்தான் செயலில் இறங்கி இருப்பார்களென்றே எண்ணுகின்றேன். அதற்குமேல் அதை விவரித்துப் பலபடக் கூறுவானேன்.

சித்தாதி நூல்களில் அமுரி என்றது முலைப்பால். பூநீறு என்றது மயிர். இதைக்கொண்டு முடியும் மருந்துதான் அணுமருந்தாகிய முப்பு எனத்தகும் என எம் ஆராய்ச்சியின் மூல்யம் கூறுகின்றேன். அம்மருந்து செய்யும் விதத்தை நான் எவ்வாறு விரித்துக் கூறினாலும்

''தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது'' என்ற பழமொழியில்தான் அடங்கியுள்ளது. ஆனதால் அதை நேர்முகப் பயிற்சி மூல்யம்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

ராஜகோ: அப்படி சாகாமூலியிலிருந்து அணுமருந்தைச் செய்து நம் முன்னோர்கள் உட்கொண்டிருந்தால் சாகா வரம்பெற்றவர்களாகி நம்முடனே வாழவேண்டுமே! ஆனால் அப்படி ஒன்றையும் காணோமே!

சாது: இந்தக் கேள்வியை நீ கேட்பாய் என்றுதான் எதிர் பார்த்தேன். கேட்டுவிட்டாய். சொல்லுகிறேன் கேள். முப்பு என்ற அணுமருந்தை முடித்த சித்தர்கள் அம் மருந்தை மட்ட உலோகங்களில் கொடுத்து பரிட்சித் திருக்கின்றார்கள். அம்மருந்து உலோகத்தின் ஒவ் வொரு அணுவிலும் புகுந்து உயர்ந்த உலோகமாகி யது. உலோகத்தின் தன்மையை மாற்றும் அம்மருந்து தேகத்தின் அழிவுத்தன்மையையும் மாற்றவல்லதாகும் என நிச்சயித்தார்கள். அதன்மேல் கற்பம் உண்ணும் முறைப்படி அம்மருந்தை உட்கொண்டு வந்ததால் அணுத்தன்மையான உடம்பைப் பெற்றார்கள். உடம்பு அழியாது உயிரினை வளர்த்தார்கள். இப்போது அவர்கள் வான மண்டலத்திலே சஞ்சரிக்கின்றார்கள் என்று சொன்னால் நீ எங்க நம்பப்போகின்றாய்; அவ் வுண்மையை வான ஆராய்ச்சியில் புகுந்திருக்கும் நவீன விஞ்ஞானிகள் சீக்கிரமே வெளியிடப்போகிறார் கள். அப்போதுதான் நீ தெளிந்துகொள்ள இயலும்.

ராஜகோ: முப்பு என்று பெயர்வரக் காரணம் என்ன? சாகா மூலியில் முப்பு இருக்கின்றதா?

சாது: முப்பு என்றால் அஃது மூன்று உப்புக்களைச் சேர்த்து முடிந்த மருந்தென அநேகர் கருதுகிறார்கள்.

ஆனால் சித்தர்கள் கொண்ட கருத்து வேறு. அவர்கள் முப்பு என்று பெயரிட்டதின் காரணம் எம் ஆசான் எமக்குச் சொல்ல அதன் வழிசென்று சித்தாதி நூல்களில் ஆராய்ச்சி செய்து அதன் மூல்யம் கண்ட ஆதாரங்களை நவீன விஞ்ஞான நிரூபணத்தோடு ஒப்பிட்டுக் கூறுகின்றேன்.

முப்பு முடிப்பதற்கு ஆதாரமானது சாகா மூலி எனச் சொன்னேம். அஃதை நீரின்றிப் பாயும் நிலத்தினில் பச்சையாம் எனத் திருமூலர் கூறுகின்றார்

பொருள்கள் பச்சையாக இருக்கும் வரை அழிவுறுவதில்லை என்பதாக நவீன விஞ்ஞானிகள் நிரூபணம் மூல்யம் கூறியுள்ளார்கள்.

உப்பில்லா பண்டம் குப்பையிலே என்ற பழமொழி இன்றளவும் நம் நாட்டில் உலவிவருகின்றது. அதனால் உப்புள்ள பண்டம் குப்பைக்குச் செல்லாது என்ற மறுமொழியும் அதனுள் அடங்கியுள்ளது

உப்புக்களினால் ஆன திரவத்தைக்கொண்டு இறந்த மனிதர்களின் உடல்களை அழிவுராமல் பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள்.

அணுமருந்தாகிய முப்பைச் செய்து உட்கொண்டால் உடலும் உயிரும் சிதைந்தழிந்து போகாதென்ற உண்மையை சித்தர்கள் வெளியிட்டார்கள். அதன் பரீட்சார்த்தமாக அணுமருந்தை மட்ட உலோகங்களில் பரீட்சித்துத் தங்கமாக்கினார்கள்.

உலோகத்தை மூலப்பொருளாகக்கொண்டே நவீன விஞ்ஞான அணு ஆராய்ச்சியை விஞ்ஞானிகள் வெற்றி பெறச் செய்திருக்கின்றார்கள்.

கும்பகோணம் இந்திய சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலையிலிருந்து 27—11—58-ம் தேதியில் வெளியிடப்பட்டிருக்கும் சித்திரம் பேசியது விஞ்ஞானம் விளங்கியது என்னும் என் ஆராய்ச்சி நூலின் பதினொன்றும் பக்கத்தில் மயிரில் செம்பு சத்து இருக்கிறதென்று கூறியுள்ளேன்.

திருமூலர் திருமந்திரத்தில் அணுக் கணக்கைப்பற்றி அணு என்ற அதிகாரத்தில் கூறும்போது கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு என்று குறிப்பிட்டுள்ளார். மயிரொன்று என்று உணர்த்திக்காட்டிய குறிப்பை முன்னே சொல்லிவந்த ஆதாரக் குறிப்புகளை மனதில் கொண்டு ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

யுரேனியம் போன்ற பொருள்களில் அணுவைப்பற்றி ஆராய்ச்சி செய்து வெற்றியடைந்த அணு விஞ்ஞானிகள் மயிரில் அணு ஆராய்ச்சியை செய்து பார்த்தால் இன்னும் அனேக உண்மைகளை இன்றைய விஞ்ஞான உலகில் நிரூபணத்தின்மூலயம் காணலாகும் என்பதை முன்னறிவுப்புச் செய்கின்றேன்.

இந்தப் பூஉலகில் நாம் உயிர் வாழ்வதற்கு நீர் நிலம் காற்று இன்றியமையாதது என விஞ்ஞான நிரூபணத்தின் மூலயம் அறிவோம்.

கலந்தது நீரது உடம்பிற் கறுக்கும்
கலந்தது நீரது உடம்பிற் சிவக்கும்
கலந்தது நீரது உடம்பில் வெளுக்கும்
கலந்தது நீர் நிலம் காற்றதுவாமே.

எனத் திருமூலர் கூறுகின்றார்.

நீரின்றிப் பாயும் நிலத்தினில் பச்சையாம் என்று கூறிய குறிப்பினை சிந்திக்கவும்.

நீரிலும் உப்பு இருக்கின்றது; நிலத்திலும் உப்பு இருக்கின்றது; காற்றிலும் உப்பு இருக்கின்றது என்பதை விஞ்ஞான நிரூபணத்தின் மூல்யம் அறியலாம்.

நீர் உப்பு; நிலஉப்பு; காற்றுப்பு என்ற மூன்று உப்புகளும் உடம்பில் கலப்பதால் தேகம் அழிவுராமல் வளர்க்கப் படுகின்றது. தேகம் அழிவுருமலிருப்பதற்குத்தானே சித்தர்கள் அணு மருந்தைச் செய்தார்கள்.

சாகா மூலியாகிய மயிர்தான் இந்த பிண்டமாகிய பூமியில் முளைத்திருக்கும் தாவரமாகச் சொன்னேன் அந்தப் பூமிக்கு எருவாக அமைந்த அந்த மூன்று உப்புக்களையும் ஒருங்கே பெற்று சாகுபடி செய்முறையில் உற்பத்தியாகியுள்ள தாவரம்தானே மயிர் என்பது.

நீர் நிலம் காற்று உடம்பில் கலப்பதால் நீரினை ஆதாரமாகக் கொண்டு திருமூலர் ஆராய்ச்சி அனுபவசித்தாந்தத்தில் கண்டு கருத்து; சிவந்து வெளுக்கும் எனவும் கூறியுள்ளார். மேலும்

கரையருகே நின்ற கானலுவரி
வரை வரை என்பர் மதியிலா மாந்தர்
நுரை திரை நீக்கி நுகர வல்லார்க்கு
நரை திரை மாறும் நமனும் அங்கில்லையே.

என்றும் கூறுகிறார்.

நரை திரை மாறும் நமனும் அங்கில்லையே என்று கூறுவதில் நரையையும் திரையையும் குறிப்பிட்டுக் கூறுவானேன் என்று சிந்தனை செய்தால் உண்மை தானே விளங்கும்.

மூப்பு நிலை எய்திய காலத்தை அறிவுறுத்துவதுதான் நரை திரை என்பது.

அந்த மூப்பை நிவர்த்தி செய்யக்கூடிய மாமருந்தாக சாகா மூலியாகிய மயிரினை முப்பிணிகளையும் நீக்கவல்லதாக கண்டதால் மூப்பு மருந்து முப்பு எனப் பெயர் பெற்றது.

மலத்தில் எச்சிலை உமிழ்ந்ததால் நோய் உண்டாகியது அதே எச்சிலை நெருப்பில் உமிழ்ந்ததால் நோய் நீங்கியது: எனக்கண்டோம். இதின் கருத்து என்ன தன் நோய்க்கு தானே மருந்தாக அமைந்ததுதானே. இந்த அனுபவ சித்தாந்தமான உண்மையை நம்பும்போது: தன் நோய்க்குத் தானே மூப்பு மருந்தாக அமைகின்றது என்று கண்ட எம் ஆராய்ச்சியை ஏன் நம்பித் தெளியலாகது எனக் கேட்கின்றேன்.

அப்படி அனு மருந்தைச் செய்து உட்கொண்டு உடல் சிதைந்தழிந்து போகாத தன்மை பெற்று உயிரினை வளர்த்துக்கொண்டு வானமண்டலத்திலே சஞ்சரிக்கின்றூர்கள் நம் பாரதநாட்டு சித்த மூதாதையர்கள்.

அங்கேயும் அவர்கள் அனு மருந்தின் செயலால் அழியாத் தன்மை பெற்ற மரம் செடி கொடிகளை வளர்த்து இப்பூமண்டலத்தில் வாழ்ந்தது போலவே வாழ்கின்றூர்கள்.

சந்திர மண்டலம் செவ்வாய் மண்டலம் குரு மண்டலம் என்ற மூன்று மண்டலங்களையும் அவர்கள் உறைவிடமாகக் கொண்டிருப்பார்கள் என்பதை நான் உறுதியாய் நம்பு வதற்கு ஜோதிஷ சாஸ்திரமே ஆதாரமாக அமைந்துள்ளது.

சூரியனுக்கு மித்துரு செவ்வாய்; சந்திரன்;குரு என்ற கிரஹங்களேயாதலால் அஃதை கருத்தினில் கொண்டு ஆராய்ச்சி செய்த உண்மையால்தான் அவ்விதம் கூறலானேன்.

வானமண்டல ஆராய்ச்சியில் புகுந்திருக்கும் அணு விஞ்ஞானிகளுக்கு இஃது பேருதவி அளிக்கவல்லது என்பதாகவே கருதுகின்றேன்.

வானமண்டல ஆராய்ச்சியில் நவீன விஞ்ஞானிகள் அதிவிரைவில் முன்னேறிச் செல்லுகின்றூர்கள். அவர்கள் வான மண்டலத்தில் சஞ்சரித்து கிரஹ மண்டலத்தில் குடி ஏறி தகாதனவற்றைச் செய்யப் புகுந்தால் அங்கிருக்கும் பாரதநாட்டுச் சித்தர்கள் அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்பல் ஐயமே இல்லை.

சித்தர்கள் செய்த இந்த அணு ஆராய்ச்சி உடம்பை வளர்ப்பதற்கேயன்றி அழிப்பதற்காக அல்ல எனவே அவர்கள் வழியைப் பின்பற்றிச் செல்லும் பாரதநாட்டுச் சித்தர் பரம்பரையும் உடல் அழிவுத் தன்மைக்குறிய ஆராய்ச்சியில் ஈடுபடவே மாட்டார்கள்.

ஆனதால் அவ்வழியைப் பின்பற்றி உடல் அழிவுத் தன்மை பெருமலிருந்து உயிரினை வளர்க்க முடியுமென்ற நம்பிக்கை உடையவனுதலால் அறிவு உதயத்தால் செய்யப்பட்ட அம்மருந்தை குறுகிய கால வயதினையுடைய மனிதன் அல்லாத ஓர் ஜீவசந்துக்குக் கொடுத்து வளர்க்கப் போகின்றேன். அதன்பின்தான் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கின்றேன். ஆனதால் என் ஆராய்ச்சி நிதர்சனமாகும் வரை பொறுத்திருக்குமாறு கோருகிறேன்.

ராஜகோ: விஞ்ஞான அறிவு மெஞ்ஞானத்தை மிஞ்சியதல்ல, அதிலும் பாரத நாட்டில் அவதரித்தவர்களுக்கு அறிவுப் பஞ்சம் ஏற்பட்டதில்லை என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் உணவுப் பஞ்சம் என்று மட்டும் ஒன்று இல்லாதிருக்குமானால். மானம்; குலம்; கல்வி; வண்மை; அறிவுடமை; தானம்; தவம்; உயர்ச்சி தாளாண்மை; தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும் பறந்து போகாமல் தற்காத்து நம் நாட்டிற்கு ஒப்பான நாடு இந்த உலகில் வேறு எங்குமே இல்லை என்ற பெருமையை நிலைநாட்டி விடலாம்; ஆதலால் பசிப்பிணி நீக்க சித்தர்கள் ஏதாவது மறைபொருளாகச் சொல்லிப் போயிருக்கிறார்களா?

சாது: கடந்த மகாயுத்த காலத்தில் மேலை நாட்டு நவீன விஞ்ஞானிகள் பசி எடுக்காமலிருக்கும் மருந்துக்களைக் கண்டுபிடித்து மிகச் சிறிய அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து சிப்பாய்களுக்குக் கொடுத்துப் பசிப்பிணி போக்கி வந்திருக்கிறார்கள். அத்தன்மை வாய்ந்த உணவு முறை நம் நாட்டில் இருந்திருக்கிறது. என்று சொல்ல எனக்கு, விருப்பமில்லை, ஆனால் அதைக் காட்டிலும் மிகச் சிறந்த உணவு முறை நம் நாட்டில் இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றாக இருக்கும் ஒரு பழங்காலக் கதையைப்பற்றி உனக்குத்தெரியுமா?

ராஜகோ; அப்படிப்பட்ட கதை ஒன்றையும் இதுவரை நான் படித்ததுமில்லை; கேட்டதுமில்லை.

சாது: குசேலர் கதை உனக்குத் தெரியுமா?

ராஜகோ: ரொம்ப நன்றாகத் தெரியுமே!

சாது: குசேலர் யார் என்பதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லேன்.

ராஜகோ: குசேலர் பரம தரித்திர நிலையை அனுபவித்த ஓர் ஏழை அந்தணர். அவருக்கு இருபத்தேழு குழந்தைகள். கண்ணபிரான் அவரது நண்பர். இடுக்கண் களை வதாம் நட்பு என்ற வாய்மொழிக்கேற்ப கண்ண பிரான் குசேலருடைய தரித்திர நிலையைப் போக்கினார் என்று குசேல உபாக்கியானம் என்ற நூல் கூறு கின்றது.

சாது: அறக்காவலனின் அவதாரம் எப்போது ஏற்படும் என்பதைக் காட்டும் கை விளக்காக நம் நாட்டில் ஒரு கதை இருக்கிறதே அதைப்பற்றி உனக்குத் தெரியுமா?

ராஜகோ: எனக்குத் தெரியாதே!

சாது: பகவத் கீதையைப்பற்றி உனக்குத் தெரியுமா?

ராஜகோ: பகவத் கீதையை நான் படித்திருக்கிறேன்.

சாது: பகவத் கீதையில் அறத்தைப்பற்றி அர்ச்சுனனுக்குக் கண்ணபிரான் என்ன உபதேசிக்கின்றார் தெரியுமா? தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கும்போது தர்மத் தைப் பாதுகாக்க நானே மனித உருவில் அவதரிக் கின்றேன் எனக் கூறுகின்றார். இதை இங்கே ஏன் சொன்னேன் தெரியுமா?

ராஜகோ: அறக்காவலனாக ஆண்டவனே அவதரிக்கின்றான் என்பதை நான் அறிந்துகொள்ளும் பொருட்டேதான் சொன்னீர்கள்.

சாது: கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் புல்லுணவு அளித்துப் காக்கும் இறைவனே அவதார புருஷனுகி கண்ணன் என்ற திருநாமம் பெற்று, குசேலர் என்ற ஏழை அந்தணனின் நண்பனுகவு மிருந்தார் எனக் கூறும் குசேல உபாக்கியானம் என்ற நூலின் உண்மைத் தத்துவம் என்னவென்று உன்னுல் சொல்லமுடியுமா?

ராஜகோ: கதையைப் படிக்கும் அளவுக்குத்தான் என் கல்வி அறிவு பயன்பட்டதே தவிர தத்துவ ஞானத்தை அறியும் அளவுக்கு என் அறிவு செல்லவில்லை

சாது: தத்துவ ஞானக் கல்விச்சாலைகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் அளவுக்கு இன்றளவில் நம் நாடு இருக் கின்றது. அதனுல் அந்தக் கல்விச் சாலைக்கு நீ எங்கே போயிருக்கப் போகின்ருய்? அதற்கு நான் வருந்தி என்செய்ய; அதனுல்தான் உனக்குச் சற்று விளங்கும் படியாகவே சொல்லவேண்டியிருக்கிறது. அப்போ தாவது புரிந்துகொள்ளும் ஆற்றலைப் பெருகின்ருயா? என்பதைப் பார்க்கின்றேன்.

கண்ணபிரான் இறைவனின் அவதாரம், அதாவது தெய்வப் பிறவி; குசேலனே மானிடப்பிறவி; என்று வைத்துக்கொள். அப்போதுதான் இறைவனும் மானிடனும் எப்படி நண்பர்களாக முடியும் என்ற சாதாரண அறிவின் சிந்தனை எழலாம். ஆனுல் மெய்ஞான அறிவோ குசேலனை உடலாகவும் கண்ணபிரானை உயிராகவும் கொண்டு சிந்திக்கச்செய்யும்.

அப்படிச் சிந்தித்தால் உயிருக்கும் உடலுக்குமுள்ள நட்புத் தன்மை விளங்கலாகும். எனவே இதிலிருந்து நீ என்ன தெரிந்துகொண்டாய்?

ராஜகோ: உயிரும் உடலும் நட்புத்தன்மை பெற்றிருப்பதாலே உயிர் வாழ முடிகின்றதென்ற உண்மையை அறிந்துகொண்டேன்.

சாது: எனவே உயிரையும் உடலையும் பற்றிய நட்புத்தன்மை விளங்கவே நம் முன்னோர்களால் சித்தரிக்கப்பட்ட தத்துவஞானக் கதைதான் குசேல உபாக்கியானம் என அறிதல் வேண்டும்.

இப்போது குசேலரென்பதும் கண்ணபிரானென்பதும் காரணப்பெயர் என்று வைத்துக்கொள். அப்படியானால் குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள் என்றும் அவர்களுக்கு இருபத்தேழு நட்சத்திரங்களின் நாமங்களையும் சூட்டப்பெற்றிருப்பதும் காரணப் பெயர்தானா என்ற சிந்தனையும் எழலாம். அதனால் அதையும் சொல்லுகிறேன்.

நம் நாட்டில் குழந்தைகள் பிறக்கும் நேரத்தைக் குறித்து வைத்துக்கொண்டு சாதகம் கணித்து அக் குழந்தைகளின் வருங்காலம்; நிகழ்காலம் இவைகளை ஜோதிஷ சாஸ்திர மூலம் அறிந்து கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள்.

ஜோதிஷ சாஸ்திரமென்பது ஒருவரின் வாழ்க்கையில் நடக்கும் இன்ப துன்பங்களைப்பற்றிக் கூறும் நூல்தான்.

இன்பதுன்பங்களை விவரித்து விரித்துக் கூறுவது திசா புத்திகளாகும். நட்சத்திரங்களைக் கொண்டுதான் திசா புத்திகளைக் கணக்கிட முடிகின்றது.

எனவேதான் உடலைக் குசேலனென்றும் உயிரைக் கண்ணபிரானென்றும் காரணப் பெயரிட்டவர்கள்; அவ் வாழ்க்கையின் இன்ப துன்பங்களைச் சித்தரிக்கும் நட்சத் திரங்களின் பெயர்களையே குழந்தைகளுக்குக் காரணப் பெயராக்கியிருக்கின்றார்கள்.

குழந்தைகள் உற்பத்திப்பெருக்கால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறதாக தற்காலத்தவர்கள் நினைப்பது போலவே குசேலர் கதையிலும் உணவுப் பஞ்சம் பற்றிய பிரச்சனையையும் உருவாக்கியிருக்கின்றார்கள்

குழந்தைகள் உற்பத்திப் பெருக்கால் நாட்டில் உணவு பஞ்சம் ஏற்பட்டு விடுகிறதென்ற தவறான கருத்தை வருங் காலத்தில் உணரப் போகிறார்கள். அப்போது உணவுப் பஞ்சத்தைப் போக்க வழி தெரியாமல் கர்ப்பத்தடை மூல்யம் உணவுப் பஞ்சத்தைப் போக்கி விடலாமென்ற குருக்கு வழிக் கருத்தடையைக் கடைப்பிடிக்கப் போகின்றார்கள்: அப்போது பசிப்பிணி நீக்குவதற்கு உங்கள் வழி செய லாற்றாது; அறக்காவலனிருக்கும்போது நமக்கெல்லாம் பசிப் பிணி ஏது? அவனை எண்ண நீங்கள் மறந்துவிட்டீர்கள். ஆனாலும் அவன் உங்களை மறக்க எண்ணவில்லை என் பதைப் பிற்காலத்தவர்கள் உணரவேண்டுமென்பதற் காகவே குசேல உபாக்கியானம் என்ற நூலில் **பசிப்பிணி நீக்கும் மருந்தைச்** சொல்லாமல் சொல்லி இருக்கின்றார் களோ வென்று எண்ணவும் தோன்றுகின்றது.

ராஜகோ: பசிப்பிணி நீக்குவதற்கு குசேல உபாக்கியானத் தில் மருந்து இருக்கின்றதா? புரியாத புதிராக இருக் கின்றதே மேலும் ஆச்சரியத்துக்குறிய செய்தியாக வல்லவோ? இருக்கின்றது.

சாது: தற்காலத்தவரின் அறிவு ஆச்சரியப்படும்படியான நிலையில்தானே வேலை செய்துகொண்டிருக்கின்றது! என்ன செய்வது!

நம் முன்னோர்கள் வழியை அவர்கள் எங்கே நினைத்து பார்க்கப்போகிறார்கள்; அது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டு விட்டுப்போக மனசாட்சி இடம் தரவில்லை; ஆனதால் உண்மை நிலையை உணர்த்திக் காட்டினாலாவது முன்னோர்கள் வழி புத்துயிர் பெறும் என்ற நம்பிக்கையில் உன்னிடம் உரையாடுகின்றேன்.

நம் முன்னோர்களின் பழைய ஏட்டுச்சுவடி ஆராய்ச்சி யில் ஈடுபட்டதால்தான் பழங்கால புராண இதிகாசங்களி லிருந்து வாழ்க்கைக்குப் பேருதவி அளிக்கவல்ல உண்மை கள் மறைந்து கிடப்பதைக் காணமுடிந்தது.

அதனால்தான் குசேலர் கண்ணபிரானுக்குக் கொடுக்க கந்தை துணியில் புல்லரிசியில் செய்த அவலை ஏன் கட்டிக் கொண்டு சென்றார் என்ற சிந்தனையை என்னுள்ளே நானே கேட்டுக்கொண்டேன்.

பழய எட்டுச்சுவடிகளை வாசித்து உணர்ந்திருந்தமை யால் என் சிந்தனைக்குப் புத்துயிர் அளித்தது.

நாயுருவி என்ற மூலிகையைப்பற்றி அனேகமாக தமிழ் நாட்டில் எல்லோருக்கும் தெரியும்; அம் மூலிகையின் தன்மை உணர்ந்தவர்கள் மிகச் சிலரே இருக்கின்றார்கள். பதார்த்தவகுண சிந்தாமணி என்னும் சித்த வைத்திய அகாதி நூலில், அம்மூலிகைக் குறிய தன்மையில் **அதன் அரிசியால் பசிபோம்** என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது எப்படி என்பதை எம் ஆராய்ச்சிச்சுவடி விளக்கிச் சொல்லு கின்றது. அதையே இங்கே குறிப்பிடுகின்றேன்.

நாயுருவிச் செடியின் அரிசியை (வித்து)க்கொண்டு வந்து சுத்தம் செய்து உமி போக்கி அரிசி எடுத்து முலைப் பாலால் அரைத்துப் பசும்பாலில் கலக்கிக் கொதிப்பித்து உண்பானுயின் செம்மையுடன் வயிறுபசி எடுப்பதில்லை. எத்தனை நாளிருந்தாலும் நளினமுடன் பசியாது மீண்டும் பசி எழும்பவேண்டுமானுல் அதற்குறிய மாற்றை உண்ண வேண்டும். அல்லாதவரை நல்ல பசியைப்பற்றி உங்களால் எண்ணிக்கூட பார்க்கமுடியாது. முன் உண்டதை விட மிகமிகக் குறைவான அளவு உணவையே உட்கொள்ள இயலும். பசித்தேவை குறையும்போது உணவுத் தேவையும் குறைகின்றதென்பதை அனுபவ சித்தாந்தத்தில் காண இயலும்போதுதான் எம் ஆராய்ச்சி நிதர்ச்சனமாகும்.

"வருங்காலத்தில் ஜனத்தொகை அதிகமாகுமாதலால் உணவைப் பெருக்க அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். கடற் பூண்டிலிருந்து இவர்கள் ஒருவகையான ருசிகரமான உண்வு தயாரித்துள்ளனர். இது உணவு வகை பெருக உதவுமாம்" என உலகப்போக்கு என்ற தலைப்பின்கீழ் 4—7—59 தினமணி செய்தித் தாளில் பிரசுரமாகியிருக்கின்றது.

என் இதைச் சொல்லுகிறேன் என்ருல்; அமெரிக்க விஞ்ஞானிகள் கடற் பூண்டிலிருந்து உணவு வகை பெருகக் கண்டுபிடித்திருக்கின்ருர்கள்; நானே நாயுருவிச் செடியிலிருந்து உணவு வகை பெருகுவதைக் கண்டுபிடித்திருக்கிறேனென்பதை நீங்களெல்லாம் சிந்தித்துப் புத்துணர்வு கொள்ள வேண்டுமென்பதற்காகவே சிந்தனையைத் தூண்டும் ஒன்றைச் சொன்னேன்.

மேலும் எம் ஆராய்ச்சியை உறுதிப்படுத்துவதற்குக் குசேலன் கண்ணபிரானுக்குக் கொடுக்கக் கந்தைத் துணியில் கட்டிக்கொண்டுபோன புல்லரிசியே சான்ருக அமைந்தது.

ராஜகோ: எப்படி? எப்படி?

சாது: புராணங்களையும் இதிகாசங்களையும் தெளிவில்லாமல் கற்று பழம் குப்பைகள் என்று குறை கூறுபவர்கள் சிந்தனையைத் தூண்டும் ஒன்றைச் சொல்லுகிறேன் கேள்.

கருவூரில் ஆத்மனுதசுவாமி என்ற வயோதிகப் பெரியவர் இருந்தார். அவர் சித்த வைத்தியத் துறையில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். ஆதலால் அவரிடம் சில மாணவர்கள் வைத்தியக் கல்வி பயின்று வந்தார்கள். இப்படி இருக்கும்போது பெரியவர் ஸ்தல யாத்திரை புறப்பட்டு விட்டார். போகும்போது அவரது சிஷ்யர்களிடம் அவர் எழுதி வைத்திருந்த கைக் குறிப்புச் சுவடியைக் கொடுத்து இதில் மருந்துகள் செய்முறை எழுதியிருக்கின்றேன். சித்தர்கள் முறை வழி வழியாக வந்துகொண்டிருப்பது. குறிப்பறிந்து மருந்து செய்து கொடுத்தீர்களானல் வியாதிகளை மிக நன்ருய்க் குணப்படுத்தும் என்றும் சொல்லிப் போயிருந்தார்.

சிஷ்யர்கள் சுவடி ஆராய்ச்சியில் புகுந்து மருந்து செய்ய முற்பட்டு விட்டார்கள். சுவடியில் உள்ளபடி செய்முறையை மனதில் கொண்டு முதலில் ஒரு மருந்தைச் செய்து பார்த்தார்கள் மருந்து முடியவில்லை ஆனதால் சுவடியின் மீதுள்ள நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து

வந்தது. எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்ற மாதிரி எழுதி வைத்துப் போய் விட்டார் என்றும் தூஷிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் அப் பெரியவர் அவ்வூருக்குத் திரும்பி வந்தார். சிஷ்யர்கள் யாரும் அவரைக் காண வரவில்லை. என்ன காரணத்தால் அவர்கள் வந்து பார்க்கவில்லை என்ற உண்மையை அறிய விரும்பினுர். பிரதம சிஷ்யனுக இருந்த தனஞ்சயன் வீட் டிற்குச் சென்ருர். அவனிடம் குருவினிடமுள்ள பயபக்தி விசுவாசம் குறைந்து போயிருப்பதைக் கண்டார்.

என்னப்பா தனஞ்சய வைத்தியமெல்லாம் எப்படி இருக்கிறதென்று கேட்டார். தனஞ்சயனுக்கு ஆத்திரம் பொங்கியது வைத்தியமுமாச்சு நீங்களுமாச்சு, இந்தாங்க சாமி உங்க சுவடி; நல்ல வேளையில் நீங்களே இந்த வைத்திய பைத்தியத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்ருன்.

என்னப்பா வைத்தியத்தில் அதற்குள் இவ்வளவு சலிப்படைந்து விட்டாயே என்ருர்.

பின்னே என்ன இந்தச் சுவடியை நீங்களே பாருங்க ளேன். இதிலிருந்து ஒரு மருந்தை முடித்துப் பார்க்கலா மென்று மருந்து செய்ய ஆரம்பித்தோம், **ரசத்தை இரு குரங்கின் கைச்சார்** விட்டு அறைக்கவும் என்று எழுதி யிருந்தீர்கள்.

அதன்படி உயிருள்ள இரண்டு குரங்குகளைப் பிடித்து வந்து அதன் இரு கைகளையும் வெட்டி உரலில் போட்டு இடித்துச் சார் பிழிந்து ரசத்தில் போட்டு அறைத்து மருந்து

செய்தோம். மருந்து முடியவில்லை எனவே மற்றவை எல்லாம் இப்படித்தானே பொய்யும் புரட்டுமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். அதனால்தான் இந்தப் பழம் குப்பைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு அந்த திசைக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டு விஞ்ஞான கால டாக்டராகி விட்டோம் என்றான்.

பெரியவரோ அவர்களின் கருத்து வேற்றுமையைக் கண்டு இப்படியும் அறிவிலிகள் இருப்பார்களா? இந்த அறிவிலிகளின் செய்கையை எண்ணி அழுவதா? சிரிப்பதா? என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு; தனஞ்சய இரு குரன்கின் கைச்சாரு என்றதும் உயிருள்ள குரங்கின் கை என்று அர்த்தம் செய்துகொண்டு இரண்டு குரங்குகளைப் பிடித்து வந்து அதன் கைகளை வெட்டி மருந்து செய்ய ஆரம்பித்து விட்டாய். சீவனையே இறைவன் எனக் கண்ட சித்தர்கள் ஒரு உயிரைக் கொலை செய்வதா? மற்றொரு உயிரைக் காப்பாற்ற மருந்து செய்யச்சொல்லி இருப்பார்கள் என்ற எண்ணம் உனக்கு அப்போது தோன்றி இருந்தால் அவ்விதம் செய்திருக்கமாட்டாய்.

உண்மைத் தத்துவம் விளங்கவேண்டுமென்ற ஆராய்ச்சி மனப்பான்மையில், மனம் எப்போதும் ஈடுபட்டிருக்கவேண்டும் என்ற நோக்கோடு சித்தர்கள் பரிபாஷையாகவே பல பாட்டுகளை இயற்றலானார்கள். அப்பாட்டுகளின் பொருள் விளக்கத் திறவுகோல்களாக அரும்பதவுரை விளக்க அகராதியும் ஆக்கியிருக்கின்றார்கள். எல்லாம் ஏட்டுச் சுவடிகளிலேயே எழுதப்பட்டதால் கவனிப்பாரின்றி சிதைந்து அழிந்துபோய்விடாது தற்காலத்தில் ஏதோ

சில புண்ணியவான்கள் அச்சுப் பிரதிகளாக ஆக்கி வெளியிட்டிருக்கின்றார்கள்.

அதில் மலை அகராதி என்று ஒன்றிருக்கின்றது. உங்களுக்கு மலைப்பாகத் தோன்றிய பதங்களுக்கு மலை அகராதியைப் பாருங்கள் என்றதை உணர்த்துவான் பொருட்டேதான் அவ்வகராதிக்கு அப்பெயர் கொடுத்தார்களோ என்று எண்ணவும் தோன்றுகின்றது.

அம் மலை அகராதியைப் பார்த்தால் **இரு குரங்கின் கை** என்பதற்கு **முசுமுசுக்கை** என்ற மூலிகையின் பெயரே என்பதாகத் தெரிந்துகொள்ளலாம்.

முன்னோர்கள் பாட்டிற்குத் தப்பும் தவறுமாகத் தன் மனப் போக்குப்படிப் பொருள் செய்துகொண்டு உண்மை இன்னதென்று உணராது கண்மூடித்தனமாக ஏதேதோ பிதற்றிக்கொள்வதோடு முன்னோர்கள் நூலைப் பொய் யென்றே பறைசாற்றவும் கிளம்பிவிடுகிறார்கள்.

மெய்ஞ்ஞானிகள் ஒருநாளும் பொய்ஞான உபதேசம் செய்யவே மாட்டார்கள். அதனால் **இருகுரங்கின் கைச் சாறு** என்பதற்குப் பொருள் கண்ட **முசுமுசுக்கை** என்ற மூலிகையைக் கொண்டுவந்து சார் பிழிந்து ரசத்தில் போட்டு அறைத்து மருந்து செய்து பார் உன் சந்தேகமெல்லாம் தீர்ந்துவிடுமென்று சொன்னார்.

உண்மை இன்னதெனத் தெளிந்து உணராமல் ஏட்டுச் சுவடிமீதும் அவன் குருவின்மீதும் கொண்ட தப்பான அபிப்பிராயத்திற்கு அவன் மனசாட்சி மன்னிப்புக் கேட்கத் தூண்டிற்று.

அதன் பின் முன்போலவே குரு சிஷ்ய பான்மை நீடித்தது.

இப்போது நான் சொன்ன கதையிலிருந்து நீ என்ன தெரிந்துகொண்டாய்?

ராஜகோ:- புராணங்கள் இதிகாசங்கள் பற்றிய ஆராய்ச்சிக் குழப்பத்திலிருந்து எழும்பும் ஒழுங்கை **இரு குரங்கின் கைச்சாற்றிற்கு** ஒப்பாகவும்; வேற்றுமைகளில் காணப்படும் ஒற்றுமையை அறிவுதயமான பெரியவராகிய குருவுக்கும் முன்னோர்கள் நூலுக்கும் ஒப்பாகவும் கொண்டு பார்த்தால் புலன்கள் அறிந்த கொள்கைகள் அனைத்தும் ஒரு சில அடிப்படை விதிகளில் அடங்கிவிடும் உண்மைத் தத்துவத்தை உணரலாகும் எனத் தெரிந்துகொண்டேன்.

சாது:- ஊமைக்கு உளருவாயன் சண்டைப்பிரசண்டன் என்று இல்லாமல் நான் இதுவரை சொன்னதைப் புரிந்துகொண்டு வருகிறுயே அதுவே எனக்குப் பரம திருப்தியாக இருக்கின்றது. அதனால் குசேலர் கதையில் **கந்தைத் துணி** என்றதின் பேருண்மையையும் இங்கே உனக்கு விளக்கிச் சொல்லுகிறேன்.

நாயுருவி என்பது செடியாக உள்ளது. அதில் நெற் கதிர்கள் போன்றேயுள்ள கதிரில் நெல் மணிபோலவேயுள்ள விதைகள் ஒட்டிக்கொண்டிருக்கும். அந்தச் செடியின் பக்கமாக நாம் போகும்போது நமது வேஷ்டி அதன்மேல் பட நேர்ந்தால் துணியோடே விதைகள் ஒட்டிக்கொள்ளும். உதரினாலும் கீழே விழாது. துணியில் ஒட்டிக்கொண்டிருக்கும் விதையைக் கையினால்தான் எடுக்க முடியும். இதை நம்பாதவர்கள் வேண்டுமானாலும் பரீட்சைசெய்து பார்த்துக் கொள்ளட்டும். இதை ஏன் இங்கே குறிப்பிட்டுள்ளேன்

என்ருல்; கந்தைத் துணியிலும் இவ்விதைகள் ஒட்டிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தமையால்தான் குசேலரும் கந்தைத் துணியில் புல்லரிசியைக் கட்டிக்கொண்டு போக முடிந்தது என்பதை நீங்களெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டுமென்பதற்காகவே நிருபணத்தில் காட்டியுள்ளேன்,

கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிருக்கும் புல் லுணவு அளித்துக் காப்போன் இறைவனென்று முன்னோர் கள் கூறிய பொய்யா மொழியும்; **அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கின்ருர்களே** என்ற நம் நாட்டின் பழமொழியும் ஆராய்ச்சியின் வாயிலாக புத்துணர்வு ஏற்படச் சிந்தனையைத் தூண்டி புதுமொழியாக்கியுள்ளேன்.

ஆனதால் குசேலன் கண்ணபிரானுக்குக் கொடுக்கக் **கந்தைத் துணியில்** கட்டிக்கொண்டுபோன அவல் என்றது **நாயுருவி வித்தால்** ஆனதே என ஆராய்ச்சியில் கண்ட உண்மை நிலையை வெளியிட்டுள்ளேன்.

நாயுருவி அரிசியை நான் முன்னே சொன்ன முறைப் படிப் பக்குவப்படுத்தி உண்போருக்குப் பசித்துன்பமென்ப தில்லை என்றதை மிகமிக நன்குணர்ந்த சித்தர்கள் இதனை உட்கொண்டுதான் பல ஆண்டு காலம் தவசில் இருந் திருக்கின்ருர்களோ என்று எண்ணவும் தோன்றுகின்றது.

ராஜகோ:- இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் பசிப் பிணியைப் போக்கவல்ல மாமருந்தை ஆராய்ச்சியின் மூலம் விளக்கிச் சொன்னதற்காக என்னைப் பொறுத்தவரையில் **அறக்காவலனின் அறிவுதயம்** தோன்றிவிட்டது என்று சொல்லிக்கொள்ளு கிறேன்.

நாயுருவி அரிசியை எவ்வளவு உண்ணவேண்டும் என்ற அளவு சொல்லவில்லையே அதைத் தெரிந்துகொள்ளாமல் என்ன செய்வது?

சாது: நாயுருவி அரிசியை உண்ணவேண்டிய அளவை மூலன் மொழி கொண்டே சொல்லவேண்டுமென்பதற்காகவே அளவு சொல்லாமல் விட்டேன். அதனால் மூலன் சொல்லும் அளவைக்கேள்.

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒருபச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாய் அறுகு
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே

என்ற பாட்டு திருமூலர் திருமந்திரம் இரந்தார்க் கீதல் என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி என்று மூலன் சொன்னதுபோலவே கண்ணபிரானும் குசேலர் கொண்டுபோன **அவலில் ஒருகைப்பிடி** தான் எடுத்து உட்கொண்டிருக்கின்றார்.

இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் **யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுறைதானே** என்ற இன்னுறையை சிரமேல்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போது **யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை** என்று சொன்னதும் ஆராய்ச்சிமூலமாகக் கண்ட **நாயுருவி** எனக் கொள்ள வேண்டியிருக்கின்றது. இங்கேதான் **மந்திரம் தந்திரமாக மாறும் கட்டம்.**

ஆதலால் யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே என்று சொன்ன மூலன் திருவாக்கை வெகு மந்திர நிதான மாகவே சிந்தித்து தெளிந்து; உணவுப் பிரச்சனையில் பற்றுக் குறை ஏற்பட்டு இரந்தார்க்கீதல் தன்மை பெற்றோரின் உதவியை எதிர்பார்த்திருக்கும் இத்தருணத்தில் **மக்கள் பசிப்பிணி போக்கவல்லதாகவுள்ள நாயுருவி அரிசியை ஒரு கைப்பிடி** எடுத்து நான் முன்னே சொன்ன முறைப்படி பக்குவப்படுத்தி உட்கொண்டால் போதுமானது. தினசரி உண்ணவேண்டுவதில்லை. மாதம் ஒரு முறையோ அல்லது சில மாதங்களுக்குப் பின்னே அவ்வளவுப்படியே உட்கொண்டால் போதுமானது.

அப்படி உட்கொள்வதாலே பசித்தேவை குறையும்; பசித் தேவை குறையும்போது உணவுத் தேவை குறையும்; உணவுத் தேவை குறையும்போது உள்ளதைக்கொண்டு நல்லது செய் என்று சொன்ன முன்னோர்களின் பழமொழி புதுமொழியாகும். நம் நாட்டில் விளையும் உணவுப் பொருளே இரந்தார்க்கீதல் தன்மை பெற்று உணவுப் பஞ்சம் என்பதே இல்லாமல் போய்விடலாம். பசிப்பிணி பற்றிய கவலையே இருக்காது,

நாயுருவி அரிசியை உண்பதால் உடலுக்கு எந்தவித மான தீங்கும் ஏற்படாது. உடலுக்குறிய சக்தியும் குறை யாது. இதில் எனக்கு மனப்பூர்வமான நம்பிக்கை ஏற்பட்ட தாலேதான் உண்மை நிலையைக் கூறலானேன்.

எம் ஆராய்ச்சி நிதர்சனமானால்; அவ்வளவு நாயுருவி விதைக்கு எங்கே போவது என்று ஐயப்படவேண்டாம். நம் நாட்டில் ஏராளமான நாயுருவிச் செடிகளிருக்கின்றன.

அச்செடிகளிலிருந்து விதைகளைப் பெற்று சாகுபடி செய்முறை மூலம் ஏராளமாக உற்பத்தி செய்து விடலாம், என்றும் கூறுகிறேன். ஆனதால் விவசாயத்துறை நிபுணர்கள் விரைவில் எம் ஆராய்ச்சியின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வார்களென்றே கருதுகிறேன்.

நான் வெளியிட்ட இம்முறை பற்றி அரசாங்கமும் நவீன விஞ்ஞானிகளும் பரிசீலனை செய்து இவ்வுணவு முறை தீங்கில்லாததுதான் என முடிவு செய்து அவர்கள் ஆராய்ச்சியை வெளியிட்டபின்புதான் எம்முறையைப் பின்பற்ற வேண்டும். அது வரை **அது யாருக்குத் தெரியும்?** என்ற சிந்தனையோடு வாசகர்களைப் பொறுத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

முடிவுரை.

இந்தப் புத்தகத்தின் இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கின்றோம்; முதலில் பொய்யாமொழியின் பொன்மொழியோடு தொடங்கினோம். அதன் பின் ஆராய்ச்சியில் உறையாடினோம். அதனால் நம் நாட்டின் பழமொழிகளெல்லாம் எவ்வளவு உன்னத நிலையை எய்தியிருந்தது என்று எண்ணிப் பார்த்தோம். அம்மட்டோ! புராணங்கள்; இதிகாசங்கள்; சோதிடக்கலை; முந்தையர் விஞ்ஞானமாகிய வைத்திய சாஸ்திரம் இவைகளையும் எட்டிப்பார்த்தோம். அதனால் **உடம்பினை வளர்த்து உயிரினை வளர்க்கும் மாமருந்தாகிய சாகா மூலியையும்; பசிப்பிணி போக்கும் மாமருந்தாகிய நாயுருவி என்ற மூலிகையையும் கண்டுகொண்டோம்.**

இன்றைய விஞ்ஞான உலகையே வியக்கச்செய்யும் புரட்சிகரமான உண்மைகளையும் உயர்வுகளையும் நமக்குத்

தந்துள்ளன என்பதைப் பார்த்த நாம் பாரதநாட்டின் பெருமையை எண்ணி எண்ணி மகிழ்கின்றோம்.

"ரோசங்கெடுவார்களென் கடைமயிர்தான் குணங்குடி
கொண்டாலென்னுயிர்க்கு உயிர்தான்"

என்று கூறி நம்சிந்தனையைத் திருப்புகின்றார் மஸ்தான் சாகிபு

ஆமாம் மயிரின் குணம் குடிகொண்டால் என் உயிர்க்கு உயிர்தான் என்று அசரீரி எழுகின்றது.

அப்போது பொய்யாமொழியும் புன்னகை தோன்ற

மருந்தென வேண்டாவாம் ஆக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றியுணின்.

என்று ஆசி கூறுகின்றார். இப்பாட்டிற்கு இப்போது எப்படிப் பொருள் கொள்ளவேண்டியிருக்கிறது தெரியுமா?

நாயுருவி அரிசியை உட்கொண்டால் உடலுக்கு ஏற்படும் பசித்துன்பமாகிய பிணிக்குப் பசிபோக்கும் மருந்தென அதாவது உணவு என வேறு வேண்டுவதில்லை. மீண்டும் பசி ஏற்பட வேண்டுமானால் அதற்குரிய மாற்றை உண்பதாலேயே பசி உண்டாகின்றது என்பதைக் குறிக்கோளால் தெளிய அறிந்து உண்ணவேண்டும் என்பதாம் என்றுதான் பொருள் கொள்ளவேண்டியிருக்கின்றது என்று கண்டு தெளிந்த குழந்தையுள்ளம் கொண்ட நாம்,

கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஓர் தோரணமாம்
தோரணத்தில் புல் முளைத்தது
புல்லைப் பசுவுக்குப் போட்டான்
பசு பால் கறந்தது
பாலைக் குழந்தைக்குக் கொடுத்தான்

என்ற குழந்தைப் பாட்டைச் சிந்தனைக்குக் கொண்டுவந்தால் கதை கதையாம் காரணமாம் என்ற முடிவுக்கு வந்துவிடுவோம்.

அப்போதுதான் நம் முன்னோர்களால் இயற்றப்பட்ட அறிவுக் களஞ்சியமான கதைகளில் அடங்கி இருக்கும் வாழ்க்கைக்குப் பேருதவி அளிக்கவல்ல காரண உண்மை நிலையைக் காணும் ஆற்றலைப் பெறலாம் என்பதை நிரூபணத்தில் காட்டவே இந்நூலை உலகறிய வெளியிட்டுச் சிந்தனையைத் தூண்டியுள்ளேன்.

சாதுமாணிக்கசீவன்.

கும்பகோணத்திலுள்ள தலைமை ஸ்தாபனமாகிய இந்திய சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலை; அதன் கிளை ஸ்தாபனமாகிய வையகளத்தூர் ஆராய்ச்சி சாலை இவைகளின் ஸ்தாபகரும் இவ்வாராய்ச்சி நூலை உலகறிய வெளியிட்டுச் சிந்தனையைத்தூண்டும் இந்நூலின் ஆசிரியரும் என் சற்குருவுமாகிய **சாதுமாணிக்கசீவன் அவர்களையும்**; இந்திய சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலை ஸ்தாபனத்தை வெகு தீவிர முயற்சியுடன் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும் நிர்வாகியும் கும்பகோணம் பிரபல **கன்னையா போட்டோ ஸ்டுடியோ** உரிமையாளருமான உயர்திரு **கன்னையா அவர்களையும்** எப்போதும் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

இவ்வாராய்ச்சி நூலை அறிஞர் உலகம் ஏற்று ஊக்கந் தந்தருளுமாக.

இங்ஙனம்,

இந்திய சித்த வைத்தியக்கலை ஆராய்ச்சி சாலை,

கும்பகோணம்.

(கிளை ஸ்தாபனம்) **வையகளத்தூர்.**

டாக்டர் **V. G. ராஜகோபாலன்.**

முக்கிய குறிப்பு:- **இந்திய பிரதமருக்கும்** சென்னை மாகாண உணவு மந்திரிக்கும்; பங்களூர் இந்திய விஞ்ஞானக் கலைக் கழகத்திற்கும் **பரிசோதனைக்காக பசிப்பிணி போக்கும் மாமருந்தாக எம் ஆராய்ச்சியில் கண்ட நாயுருவி** அரிசியை அனுப்பியுள்ளோம். மிக விரைவில் பரிசீலனை செய்து உண்மை நிலையை விளக்கக் கூடும் என நம்புகின்றோம்.

★

ராஜேஸ்வரி·பிரஸ், காந்திரோடு, மன்னார்குடி.

முதல் வெளியீட்டின் மதிப்புரைகள்:

Dr. N. R. Srinivasan,

METAL LURGIST BHILAI STEEL PLANT,

BHILAI-1 P. O. Drug Dist (M. P.)

12th December, 58.

Sir,

I am in receipt of your book "Chitthiram Pesiathu" redirected from **Indian Institute of Science** and acknowledge the same. **The book is thought provoking ....**

Thanking you,

N. R. Srinivasan,

★

PERSONAL SECRETARY,

to Shri. G. D. NAIDU,

3—1—59.

We appreciate very much the interest you have taken to dive deep into the ocean of the culture of our ancient Siddars of Tamil Nad. If we can produce some more real workers in the line, we hope we can understand something of the past in the realm of alchemy and other cults.

Thanking you once again for the pamphlets.........

ராஜேஸ்வரி பிரஸ், மகாத்மாகாந்திரோடு, மன்னார்குடி.